# நரகத்திற்கு அழைத்துச் செல்லும் சுப்ஹான மவ்லிது

(சுப்ஹான மவ்லிதின் தமிழாக்கம்)

ஜே.எம். சாபித் (ஷரயி)

**நரகத்திற்கு அழைத்துச் செல்லும் சுப்ஹான மவ்லிது**
**(சுப்ஹான மவ்லிதின் தமிழாக்கம்)**

**ஆசிரியர் : ஜே.எம். சாபித் (ஷரயி)**

**மூன்றாம் பதிப்பு : நவம்பர் 2017 –ஹி–1439**

**வெளியீடு : ஹுதா வெளியீட்டுப் பணியகம், கல்முனை.**

**விலாசம் : 471, கடற்கரை வீதி, கல்முனை – 09.**

**கணனி வடிவமைப்பு மற்றும் அச்சுப் பதிப்பு :**

**எம்.எஸ். முஹம்மட் இர்சாத்**

**டொட் பிரின்டர்ஸ், பிரதான வீதி, சாய்ந்தமருது.**

**தொ.பே : 077 6965450**

# ஹுதா நூலகம்

குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் இயங்கி வரும் எமது ஹுதா வாசிகசாலையானது குர்ஆன் தர்ஜுமாக்கள், தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட ஹதீஸ் கிரந்தங்கள், பிரபல மார்க்க அறிஞர்களின் பயான் இருவெட்டுக்கள் மற்றும் பல தலைப்புகளை உள்ளடக்கிய நூல்கள் என்பனவற்றை மிக நியாய விலைகளில் வாசகர்களுக்கு வழங்குகின்றது.

அத்தோடு எமது வாசிகசாலை வாசகர்கள் வாசித்து பயனடையும் நோக்கில் சாதாரண நாட்களில் அஸர் தொழுகை முதல் 05 : 30 மணி வரையும், மஃரிப் தொழுகை முதல் இரவு 08 : 30 மணி வரையும், ஜும்ஆ தினத்தில் விசேடமாக ஜும்ஆ தொழுகை முதல் 02 : 00 மணி வரைக்கும் வாசகர்களுக்காக திறந்திருக்கும்.

எனவே, மார்க்க அறிவை வளர்த்துக் கொள்ளும் நன் நோக்கம் கொண்ட அனைத்து ஈமானிய உறவுகளும் எமது ஹுதா நூலகத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுமாறும், தங்களுடைய மார்க்க அறிவை மேன்படுத்திக் கொள்ளுமாறும் ஹுதா நூலகம் அன்பாய் வேண்டிக் கொள்கின்றது.

இப்படிக்கு
ஹுதா நூலகம்,
ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் கட்டிடம்,
471, கடற்கரை வீதி, கல்முனை - 09.

# நன்றி உரை

அல்லாஹ்வுடைய உதவியால் இந்நூல் மிகச் சிறப்பாக வெளியிடப்பட உடலாலும் உடமைகளாலும் எனக்கு மிக உதவியாக இருந்த அனைத்து ஈமானிய உறவுகளுக்கும் ஜஸாகுமுல்லாஹ6ஹைரன். அது போன்று எனது இந் நூலை சரி பிழை பார்த்து எனக்கு மேலான ஆலோசனைகளை வழங்கியதோடு நான் இப்படியான எழுத்துத் துறைகளில் ஆர்வம் காட்ட எனக்கு பல வழிகாட்டல்களை வழங்கிய என்னுடைய அன்பிற்குரிய கல்லூரி ஆசான்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் ஜஸாகுமுல்லாஹ6 ஹைரன்!

# நரகத்திற்கு அழைத்துச் செல்லும் சுப்ஹான மவ்லிது

(சுப்ஹான மவ்லிதின் தமிழாக்கம்)

ஜே.எம். சாபித் (ஷரயி)

# அணிந்துரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனும் ஆகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கின்றேன். எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே அவனது தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள், அவர்களைத் துயர்ந்தவர்கள் அனைவர்கள் மீதும் ஸலாத்தும் ஸலாமும் உண்டாவதாக!

இஸ்லாமிய மார்க்கம் தூய்மையானது அதை உரிய முறையில் அல்லாஹ்வும் அவன் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் காட்டிய அடிப்படையில் பின்பற்றும் போதுதான் நாம் மறுமையில் அதற்குரிய பிரதி பலன்களை கண்டுகொள்ள முடியும்.

மறுமையில் நிரந்தர நரகிற்கு வழிகாட்டும் ஷிர்க்கை எல்லா நபிமார்களும் கண்டித்திருக்கிறார்கள் இறுதித் தூதரும் இப்பணியை சிறந்த முறையில் செய்தார்கள். இந்த ஸுப்ஹான மவ்லிதின் மூலம் நபியின் பெயரை வைத்து ஷிர்க் நுழைகிறது என்றால் அதனைக் கண்டிப்பதும் சுட்டிக்காட்டுவதும் எச்சரிப்பதும் உலமாக்கள் அனைவர்கள் மீதும் கடமையாகும்.

இதன் அடிப்படையில் சகோதரர் ஜே.எம். சாபித் (ஷரயி) அவர்கள் கல்லூரியிலிருந்து வெளியாகியதிலிருந்து இது போன்ற மார்க்க பிரச்சாரப் பணியில் சிறந்து காணப்படுகின்றார். இவர் அஷ்ஷேக் அன்சார் தப்லீகியின் முதன்மை மாணவர்களில் ஒருவர் என்பதனால் இவ் ஆய்வை அவரின் மேலான ஆலோசனைகளுக்கினங்க மேற்கொண்டதென்பது இன்னும் மகிழ்சியை ஏற்படுத்துகின்றது. உண்மையில் இந்நூல் பொது மக்களுக்கு மிகுந்த பயனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. மிகத் தெள்ளத் தெளிவாக ஸுப்ஹான மவ்லிது என்று மக்களால் ஓதப்பட்டு வரும் நூலிலுள்ள இணைவைப்பை யாவரும் புரிந்து கொள்ள ஏதுவாக தொகுத்துள்ளார் என்பது இந் நூலின் சிறப்பம்சமாகும்.

எனவே நிரந்தர நரகை நுழைவிற்கும் ஷிர்க்கில் இருந்து பாதுகாப்புப் பெறவும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறியவும் இந்நூல் தெளிவை வழங்கிடும் எனவும் எதிர் பார்கின்றேன் எனவே சகலரும் இந் நூலைப் படித்து பயன்பெற முயற்சிக்குமாறு வேண்டுவதோடு ஆசிரியரின் இம்முயற்ச்சி தொடரப் பிரார்திக்கின்றேன்.

**அஷ்ஷேக்- ஏ.சி. தஸ்தீக் (ஹாமி, மதனி)**

**தலைவர் - மஜ்லிஸுத் தஃவா, மத்திய முகாம், சவளக்கடை.**

# மதிப்புரை

எல்லலாம் வல்ல ஏக வல்லோன் அல்லாஹ் ஒருவனுக்கே அனைத்துப் புகழும்! அல்ஹம்துலில்லாஹ்! ஸலவாதும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் உற்றார் உறவினர்கள், உத்தம ஸஹாபாக்கள், அன்னாரின் அடிச்சுவட்டை பின்பற்றி வாழ்ந்த வாழும் அனைவருக்கும் என்றென்றும் உண்டாவதாக!

“நரகத்திற்கு அழைத்துச் செல்லும் ஸுப்ஹான மவ்லிது” எனும் இந்த சிறிய நூலை சிறந்த வளவாளரும், வளர்ந்து வரும் எழுத்தாளருமான ஜே.எம்.சாபித் (ஷரயி) மிகச் சிறப்பாகத் தொகுத்துள்ளார்கள்.

மவ்லிதில் உள்ள ஷிர்க்கின் வாசகங்கள், மடமைகள், குர்ஆன் ஸுன்னாவுக்கு நேர் முரணான வார்த்தைகள் பல உலமாக்களால் ஏற்கனவே சுட்டிக் காட்டி பல நூல்கள் வெளிவந்த போதிலும் இவருடைய இந்த தொகுப்பு உண்மையில் சற்று வித்தியாசமானதாகவும் இலகுவில் மனதில் பதியக் கூடிய வகையிலும் இருப்பதை இதனை வாசித்துப் பார்த்த போது உணர்ந்து கொள்ள முடிந்தது.

மவ்லிதின் வாசகங்களை எடுத்துக் காட்டி இது எப்படி குர்ஆன் ஸுன்னாவிற்கு முரணாகின்றது என்பதை விளக்கியுள்ளமையும், எளிய நடை முறையில் வார்த்தைகளை பயன்படுத்தியமையும் சிறப்பாக அமைந்துள்ளது.

ஸுப்ஹான மவ்லிதின் ஆசிரியர் யார் என்பதைக் கூட இன்னும் அறிய முடியாத நிலையில் அதனை குர்ஆனுக்கு நிகராக மதித்து ஒரு வார்த்தை பிசகாமல் அப்படியே வருடா வருடம் பள்ளிவாசல்களில் பாடப்பட்டு வருவது கண்டிப்பாக ஒழிக்கப்பட வேண்டியதாகும் என்பதில் அறிவுடைய யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எனவே இவரது எழுத்துப் பணி தொடரவும், இவர் மூலம் இன்னும் பல நூற்கள் சமூகத்துக்கு வந்து சேரவும் பிரார்த்திக்கின்றேன்!

**அஷ்ஷேக் ஐ.எல்.ஏ. பிர்னாஸ் (மன்பஈ,** JP)

# பொருளடக்கம்


05 - முன்னுரை
07 - சுப்ஹான மவ்லிது
07 - தோற்றம்
08 - சுப்ஹான மவ்லிதை எழுதியவர் யார்??
08 - சுப்ஹான மவ்லிது நபிகளாரை புகழ்கிறதா??
11 - கட்டுக் கதைகளின் தொகுப்பு நூல் சுப்ஹான மவ்லிது
12 - இவ்வுலகில் முதன்முதல் படைக்கப்பட்டது நபிகளாரின் ஒளியா?
13 - ஆதம் நபியின் படைப்புக்கு 1000 வருடங்களுக்கு முன் நபிகளாரின் ஒளி படைக்கப்பட்டதா??
15 - முஹம்மது நபியின் (ஸல்) ஒளியினால் அல்லாஹ் எதையேனும் படைத்தானா?
16 - இப்ராஹிம் நபியையும் நூஹ் நபியையும் நபிகளாரின் ஒளியா காப்பாற்றியது?
18 - முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இல்லை என்றால் ஆதம் நபி படைக்கப்பட்டிருக்க மாட்டாரா?
20 - ஆதம் (அலை) அவர்கள் முஹம்மது நபி(ஸல்) அவர்களைக் கொண்டு வஸீலா தேடினார்களா?
22 - நபியவர்கள் கருவறையில் பெயர் சூட்டப்பட்டார்களா?
23 - நபியவர்களை ஆமினா அம்மையார் யாருக்கும் தெரியாமலா பெற்றெடுத்தார்கள்?
24 - நபியவர்கள் பிறக்கும் போதே கத்னா செய்யப்பட்டு பிறந்தார்களா?
25 - நபிகளார் பிறந்த வேளை மலக்குமார்கள் வந்து பார்வையிட்டார்களா?
26 - நபியவர்கள் பிறந்தவுடன் மிஃராஜ் சென்றார்களா?
27 - நபி (ஸல்) பிறக்கும் முன்னே குர்ஆனில் அவர்களின் பெயர் அஹ்மத் என்று எழுதப்பட்டதா?
28 - நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்வாக சித்தரிக்கும் சுப்ஹான மவ்லிது
29 - நபி (ஸல்) அவர்களுக்கு பாவங்களை மண்னிக்கும் அதிகாரம் உண்டா?
32 - பாவங்களை மறைத்து அவைகளை அகற்றிடும் சக்தி நபியவர்களுக்கு உண்டா?
34 - நபி (ஸல்) அவர்களுக்கு மறைவான ஞானம் உண்டா?
37 - நபி (ஸல்) அவர்களைக் கொண்டு வஸீலா தேடலாமா?
39 - ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உதவிதேடி நபிகளாரிடம் பிரார்த்தித்தார்களா?
41 - பிரார்த்தனைகளுக்கு பதிலளிப்பது யார் அல்லாஹ்வா? அல்லாஹ்வின் தூதரா?
43 - நபி (ஸல்) அவர்களால் நோய்களை குணப்படுத்த முடியுமா?
46 - படைப்பினங்களின் இரட்சகர் யார்?
46 - கஷ்டங்கள் துன்பங்களின் போது கை கொடுப்பது அல்லாஹ்வா அல்லாஹ்வின் தூதரா?
49 - நபி (ஸல்) அவர்கள் மீது சத்தியம் செய்யலாமா?
50 - மரணித்தோரை உயிர்ப்பிப்பவரா? நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்
52 - முடிவுரை

# முன்னுரை

எல்லாப் புகழும் சர்வ வல்லோன் அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும் அல்ஹம்துலில்லாஹ், சாந்தியும் சமாதானமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரின் உயரிய வாழ்க்கையை அணுவணுவாக பின்பற்றி வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைவர்கள் மீதும் உண்டாகட்டும் என பிரார்த்தனை புரிந்தவனாக எனது முன்னுரையை ஆரம்பம் செய்கின்றேன்.

இவ்வுலக முஸ்லீம்கள் அனைவராலும் தன்னுடைய உயிரை விடவும் மேலாக மதிக்கப்பட வேண்டியவர்  நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்பது குர்ஆன் ஹதீஸ் நமக்கிடும் கட்டளையாகும்.

அனஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள் "உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தை, அவரின் குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக அன்பானவராகும் வரை அவர் (பூரணமான) இறை நம்பிக்கையாளராக மாட்டார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்" (புஹாரி-15)

ஆனால் இன்று நபிகளாரை நேசிப்பதனை ஓர் அங்கமாகக் கொண்ட மனிதன் அந்த நேசத்தைத் தவறான முறைகளில் கையாள்வதே இந் நூலை எழுதக் காரணமாயிற்று.

காலங்காலமாக எமது சமூகம் நபிகளாரை நேசிக்கின்றோம், புகழ்கின்றோம் என்ற போர்வையில் இபாதத்தாகவும் நன்மைகளை எதிர்பார்த்தும் அரங்கேற்றிவரும் ஒரு நூதண அனுஷ்டானமே மவ்லிது பாடல்களாகும். ஐவேளை தொழாதவர்கள் கூட, இந்த மவ்லிது பாடல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டிவருவது இது எந்தளவிற்கு மக்கள் மத்தியில் இடம்பிடித்திருக்கின்றது என்பதற்குச் சிறந்த உதாரணமாகும்.

இந்த மவ்லிது பாடல்கள் சுப்ஹான மவ்லிது, முஹிய்யிதீன் மவ்லிது, ஹஸன் ஹுஸைன் மவ்லிது, ஹிதாயதுல்லாஹ் மவ்லிது, யா குத்பா மவ்லிது, புர்தா பாடல்கள், பத்ர் ஸஹாபாக்கள் மவ்லிது, மீரான் ஸாஹிபு மவ்லிது என்றெல்லாம் ஒவ்வொரு மகான்களின் பெயரிலும் உலா வருவதை அவதானிக்கின்றோம். இவைகளில் பிரதான இடத்தைப் பெறுகின்ற மவ்லிதே நபிகளாரை நபி என்ற அந்தஸ்த்தைத் தாண்டி அல்லாஹ்வுடைய அந்தஸ்த்தில் வைத்துப் பாடப்படுகின்ற சுப்ஹான மவ்லிது ஆகும்.

இந்த சுப்ஹான மவ்லிது என்று சொல்லப்படும் நூலானது வருடாவருடம் ரபிஉல் அவ்வல், முஹர்ரம் மற்றும் இன்னும் சில முக்கிய தினங்களில் பள்ளிவாயல்கள் மற்றும் சில தனவந்தர்களின் வீடுகளில் பாரிய செலவீனங்களுக்கு மத்தியில் ஓதப்பட்டு வருவதனையும் அதனை ஓதுபவர்கள் முன்னிலையில் உணவுகள் படைக்கப்பட்டிருப்பதனையும் ஓதி முடிந்தவுடன் உணவுகள் பறிமாறப்பட்டு, ஓதிய மௌலவிமார்கள் காணிக்கையாகப் பணம் பெறுவதனையும் காலங்காலமாக நாமும் அவதானிக்கிறோம்.

இவர்கள் இவ்வளவு பக்திப் பரவசத்தோடு ஓதும் இந்த நூலில் அப்படி என்னதான் சொல்லப்பட்டிருக்கின்றது அல்லது இவர்கள் நபிகளாரை என்னென்றுதான் சொல்லிப் புகழ்கிறார்கள் என ஆராய முற்பட்ட வேளையே, இந்த சுப்ஹான மவ்லிது என்ற நூல் எந்தளவிற்குப் பொதுமக்களை அறியாமையில் வழிகெடுத்துக் கொண்டிருக்கும் இணைவைப்பின் தொகுப்பு நூலாகும் என்பது வெளிச்சத்திற்கு வந்தது.

இதனைப் பக்தியோடு நபிகளாரைப் புகழ்கிறோம் என்ற பெயரில் பாடுகின்ற முதியவர்கள், சின்னஞ்சிறார்கள் ஏன் சில உலமாக்கள் கூட இதன் பொருள் விளங்காமலேயே இது கால வரைக்கும் பாடிவருகின்றனர். இதுவே இவ் வழிகேட்டை மக்கள் உணராமலிருக்க முக்கிய காரணமாகும்.

எனவேதான், இந்த சுப்ஹான மவ்லிது என்ற நூல் எந்த அளவிற்கு நபிகளாரின் பெயரால் கட்டுக்கதைகளையும் பொய் பித்தலாட்டங்களையும் நபிகளாரை அல்லாஹ்வாக சித்தரிக்கும், இணைவைப்பான வார்த்தைகளையும் கொண்டுள்ள இணைவைப்பு நூல் என்பதனைக் குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களோடு மக்கள் மன்றுக்குக் கொண்டுவர வேண்டியது என் போன்ற ஒவ்வொரு ஈமானிய உள்ளங்களினதும் பாரிய பொறுப்பாகும் என உணர்கிறேன்!

அதனடிப்படையிலேதான் “நரகத்திற்கு அழைத்துச் செல்லும் சுப்ஹான மவ்லிது” என்ற எனது இந் நூலில் இவர்கள் எழுதிவைத்திருக்கும் சுப்ஹான மவ்லிது புத்தகத்திலுள்ள கட்டுக்கதைகளையும் எமது ஈமானை பறித்தெடுக்கும் இணைவைப்பு பாடல் வரிகளையும் வரிக்கு வரி மொழிபெயர்த்து வழங்குகின்றேன். இந்நூலில் சுப்ஹான மவ்லிதில் இடம்பெறும் சில முக்கிய இணைவைப்புகளே அடையாளப்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, இறுதிவரைக்கும் இந் நூலை முழுமையாகப் படித்து, அறியாமையில் நாம் செய்து கொண்டிருக்கும் எம்மை நிரந்தர நரகில் தள்ளிவிடும் இந்த வழிகேட்டை விட்டும் எம்மையும் எமது குடும்பத்தையும் அல்லாஹ்வின் உதவியோடு பாதுகாப்போம். வல்ல இறைவன் அதற்கு எமக்கு அருள்புரிவானாக!!

**ஜே.எம். சாபித் (ஷரயி)**
E-mail : Sabith93@gmail.com
2015-11-18

# சுப்ஹான மவ்லிது

பொதுவாக எம் மத்தியில் வருடாவருடம் பல பெயர்கள் கொண்டு ஓதப்பட்டுவரும் இந்த பாடல்கள் மவ்லிதுகள் என்றே அழைக்கப்படும். மவ்லிது என்ற அரபுப் பதத்திற்கான தமிழ் வடிவம் பிறத்தல், பிறந்த தினம் என்பனவாகும். அதனால்தான் உத்தம நபியின் பிறந்த தினத்தைச் சங்கைப்படுத்த வேண்டும் என்று எண்ணம் கொண்ட சில இனம் தெரியாதோர் நபிகளாரின் பெயரில் சுப்ஹான மவ்லிது (நபியின் பிறந்த நாள்) எனும் இந்தக் கட்டுக்கதைகள் அடங்கிய நூலை எழுதி மக்கள் மயப்படுத்தினர்.

# தோற்றம்

இஸ்லாத்தில் எந்தவொரு அமலாக இருந்தாலும் அதனை நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்திருக்க வேண்டும் அப்படி நபியவர்கள் காட்டித்தராதவிடத்து மார்க்கமாக எண்ணி செய்யப்படுபவை பித்அத் ஆகும். இந்த சுப்ஹான மவ்லிது எனும் பாடல்களை இபாதத்தாகக் கருதிப் படிக்கும் வழிமுறையை நபியவர்கள் காட்டித்தந்தார்களா? என்றால் இல்லை. ஸஹாபாக்களில் யாராவது இவர்கள் பாடும் இந்த இணைவைப்பான பாடல் வரிகளை பள்ளிவாயல்களிலோ வீடுகளிலோ உட்கார்ந்து கூட்டாகப் பாடினார்களா? என்றால் இல்லை இப்படியான மவ்லிது புத்தகங்கள் மஸ்ஜிதுந் நபவியிலோ அல்லது யாராவது ஸஹாபாக்களின் வீடுகளிலோ இருந்ததா என்றால் நிச்சயமாக இல்லை அப்படியாயின், நபிகளார் சொல்லாத இந்த மவ்லிது, செய்யாத இந்த மவ்லிது, அங்கீகரிக்காத இந்த மவ்லிது எப்படி மார்க்கமாக முடியும்? இது தெளிவான பித்அத்தே ஆகும். யாராவது பித்அத்தை நடைமுறைப்படுத்தினால், அது வழிகேடாகும் அது அவரை நரகிற்கு இட்டுச் செல்லும் என்று நபி (ஸல்) அவர்கள் தெளிவாக எச்சரிக்கை செய்தார்கள் என்பதை மவ்லிதுப் பாடல்களைப் பாடுகின்ற தோழர்களுக்கு எத்திவைக்க விரும்புகின்றேன்!

நன்மை உண்டு என மார்க்கமாக கருதப்படும் இந்த மவ்லிதுகளை, இறுதித் தூதர் எம் பெருமானார் நபியவர்கள் பிறந்து வளர்ந்த சவுதி அரேபியாவில் எங்கும் காண முடியாது. இது தமிழ் பேசும் மக்கள் வாழக் கூடிய இந்தியாவின் கேரளாவிலும் தமிழ்நாடு மற்றும் இலங்கையிலுமே பாடப்பட்டு வருகின்றது. அப்படியாயின் இது எப்படி மார்க்கமாக முடியும்?

இப்படி குர்ஆனும் ஹதீஸூம் பகலைப் போன்று தெளிவாக இருக்கின்ற பொழுது இவைகளில் இல்லாத சுப்ஹான மவ்லிது எப்பொழுது தோன்றி இருக்க முடியும் என்ற கேள்வி எழுவது நியாயமானது. இன்று இஸ்லாம் தோன்றி பல்லாயிரம் வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில், இந்த சுப்ஹான மவ்லிது இன்றிலிருந்து 300 தொடக்கம் 370 ஆண்டுகளாகத்தான் மக்களால் ஓதப்படுகின்றது என்றால் இது பின்னர் உருவாக்கப்பட்ட வழிகேடு என்பது மீண்டுமொருமுறை

## சுப்ஹான மவ்லிதை எழுதியவர் யார்??

உலகமே ஏற்றுக் கொண்ட ஒரு நியதி ஒரு நூல் எழுதப்பட்டால் அதற்கு ஓர் உண்மையான ஆசிரியர் இருப்பார் என்பது. ஆனால், இணைவைப்பின் தொகுப்பாகிய சுப்ஹான மவ்லிதை எழுதிய ஆசிரியர் யார்? என்பது அதனை ஓதும் நேசர்களுக்கே! இது வரை தெரியவில்லை. சுப்ஹான மவ்லிதின் முன்பக்க அட்டையிலும் அதன் 07ம் பக்கத்திலும் ஆசிரியர் குறித்து கூறப்படுவதைப் பாருங்கள்.

يْنَدمَوْلِدُ النَّبِيِّ صَلَى اللهُ عَلَيْهِ وَسَلم للشَّيْخ الخَطِيْب مُحَمَّدِ المَدَنِيْ
ىلَلعوَقِيْلَ لِحُجَّةِ الإسْلام الغَزَّالِى رَحِمَهُمَا الله تَعَالى

**‘நபியவர்களின் மவ்லிது அஷ்ஷேக் அல்-கதீப் முஹம்மத் அல் மதனி அவர்களுக்குரியது இன்னும் (இந்நூல்) ஹூஜ்ஜதுல் இஸ்லாம் கஸ்ஸாலி அவர்களுக்குரியது என்றும் சொல்லப்படுகின்றது’ (சுப்ஹான மவ்லிதின் 07ம் பக்கம்)**

யார் இந்நூலின் உண்மையான ஆசிரியர் என்பது இது கால வரைக்கும் புரியாத புதிராகவே இருந்துவருகின்றது. ஆனால், இந்த கட்டுக்கதைகள் அடங்கிய நூல் எந்தவொரு அரபுலக நேர்வழி நடந்த இமாம்களாலும் எழுதப்படவில்லை. மாறாக, இந்தியாவின் கேரளாப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மொழியைத் தாய் மொழியாகவும் அரபுப் பாசையை இரண்டாம் மொழியாகவும் கொண்ட ஒரு கவிஞனாலேயே இது எழுதப்பட்டுள்ளது. சுப்ஹான மவ்லிதின் முதலாவது பக்கமும் இன்னும் சில பக்கங்களும் இந்நூலை தமிழ் தெரிந்த ஒருவர்தான் எழுதியுள்ளார் என்பதனை ஊர்ஜிதம் செய்கின்றன. ஏனெனில், அவ்விடங்களில் தமிழ் எழுத்துக்கள் அரபு வாசகங்களால் (அரபுத் தமிழில்) எழுதப்பட்டுள்ளன. இது ஒன்றே போதும் இது யாரோ தமிழ் மொழி நன்றாக தெரிந்தவரால்தான் எழுதப்பட்டுள்ளது என்பதனை அறிய.

## சுப்ஹான மவ்லிது நபிகளாரை புகழ்கிறதா??

தூதர்களுக்கெல்லாம் இறுதியானவராக அனுப்பபட்ட பெருமானார் நபி (ஸல்) அவர்கள், எம் உயிரை விட மேலாக மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பது யாவரும் ஏற்றுக்கொண்ட விடயமே! ஆனால், இந்த சுப்ஹான மவ்லிதைப் பாடக் கூடியோர் நபிகளாரைப் புகழ்பாடுகிறோம் என்றே இதனை பாடிவருகின்றனர். அதற்கு ஸஹாபாக்களின் சில ஹதீஸ்களை ஆதாரமாகக் காட்டி மவ்லிதை நியாயப்படுத்துவதைப் பார்க்கின்றோம்.

நபிகளாரைப் புகழ்வதை எப்பொழுதுமே நாம் மறுக்கவில்லை. நபிகளாருக்கே உரிய பண்புகளைக் கொண்டு, மார்க்க வரம்பை மீறாமல் நபியை நபியின் அந்தஸ்தில் வைத்துப் புகழ்வது அனுமதிக்கப்பட்டதே. இவர்கள் ஆதாரமாக முன்வைக்கும் செய்திகள் நாம் கூறிய வரம்புகளைப் பேணி ஸஹாபாக்கள் நபியவர்களை புகழ்ந்த செய்திகளாகும். இங்கு கவனிக்க வேண்டிய விடயம், நபிகளாரைப் புகழ்வதல்ல நபிகளாரை என்ன சொல்லிப் புகழ்வது என்பதே. நபித் தோழர்களில் அரபுப் புலமை வாய்ந்த கவிஞர்கள் சிலர் நபிகளாரை ஒரு சில சந்தர்ப்பங்களில் புகழ்ந்துள்ளார்கள். யுத்தத்தில் எதிரிகள் நபிகளாரை இழிவுபடுத்திக் கவிதை இயற்றிய பொழுது ஹஸ்ஸான் இப்னு தாபித் (ரழி) போன்ற கவிப்புயலாகத் திகழ்ந்த ஸஹாபாக்கள் நபியின் கண்ணியத்தை வெளிப்படுத்தியும் காபிர்களுக்கு மரண அடியாகவும் கவிதைகளை இயற்றினார்கள். ஆனால் எந்த ஸஹாபாக்களும் நபி என்ற அந்தஸ்தைத் தாண்டி சுப்ஹான மவ்லிதில் வருவது போன்று கடுகளவும் இணைவைப்பான வார்த்தைகளைச் சொல்லிப் புகழவில்லை. அதில் கூட எல்லா ஸஹாபாக்களும் கவிதை சொல்லவில்லை. கவிதைத் துறையில் பாண்டித்தியம் பெற்ற ஒரு சிலரே அழகிய பொருள் நயம் மிக்க கவிதைகளை இயற்றினார்கள். அடுத்து அவர்கள் அரபிகளாக இருந்த காரணத்தினால் பொருள் விளங்கி நபிகளாரைப் புகழ்ந்தார்கள். ஆனால், நபிகளாரைப் புகழ்கிறோம் என சுப்ஹான மவ்லிது ஓதும் நண்பர்கள் தாம் ஓதும் பைத்துகளுக்கு என்ன அர்த்தம் என்று தெரியாமலேயே இவ்வளவு காலமாக ஓதுகிறார்கள் என்றால் இது எப்படி நபிகளாரைப் புகழ்ந்ததாகும்?

அதுமட்டுமின்றி ஹஸ்ஸான் இப்னு தாபித் (ரழி) போன்ற ஸஹாபாக்கள் இயற்றிய கவிதைகளை வேறு எந்த ஸஹாபாக்களும் சுப்ஹான மவ்லிது போன்று புத்தகமாக அடித்து வைத்துக் கொண்டு, வருடாவருடம் ரபியுல் அவ்வலிலும் முஹர்ரத்திலும் கூட்டாக உட்கார்ந்து கொண்டு பள்ளிவாயல்களிலோ வீடுகளிலோ ஓதவில்லை, அப்படி ஓதுங்கள் நன்மையுண்டு என்று நபியவர்கள் ஒரு பொழுதும் கூறியதுமில்லை.

ஆனால், நபியவர்களைப் புகழ்வதாகச் சொல்லி எழுதப்பட்டுள்ள இந்த சுப்ஹான மவ்லிது நூலில் இஸ்லாத்திற்குப் புறம்பான பல கட்டுக்கதைகளும் நபிகளாரை நபி என்ற அந்தஸ்த்தைத் தாண்டி அல்லாஹ்வின் அந்தஸ்திற்கு உயர்த்துகின்ற இணைவைப்பான வார்த்தைகளுமே முழுக்க முழுக்க நிரம்பியுள்ளது. இதனைத்தான் நபியவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள். புகழ்ச்சி என்பது எல்லை மீறுகின்ற பொழுது இகழ்ச்சியாகிவிடும் அதனை அல்லாஹ்வின் தூதர் அவர்கள் விளக்குவதைப் பாருங்கள்.

“மர்யம் (அலை) யின் மகன் ஈஸா (அலை) அவர்களை நஸாராக்கள் எல்லை கடந்து புகழ்ந்தது போல், என்னையும் நீங்கள் எல்லை மீறிப் புகழாதீர்கள். நான் அல்லாஹ்வுடைய அடியானாகவே இருக்கின்றேன். (என்னை) அல்லாஹ்வின் அடிமை என்றும் அல்லாஹ்வின் தூதர் என்றும் கூறுங்கள்” (புஹாரி-3445)

இந்தச் செய்தி நபியவர்களை எல்லை மீறிப் புகழ்வதை வன்மையாகக் கண்டிக்கின்றது. அன்று நஸாராக்கள் அல்லாஹ்வின் தூதராகிய ஈஸா நபியை அல்லாஹ்வின் குமாரர் என எல்லை மீறிப் புகழ்ந்தார்கள். அந்த செய்தியைச் சுட்டிக்காட்டி நபிகளார் எல்லை மீறிப் புகழ்வதனை தடுத்தார்கள் என்றால், நபிகளாரை அல்லாஹ்வாகவே நினைத்துப் புகழும் இந்த சுப்ஹான மவ்லிதை என்ன சொல்வது? அது போன்றே நபியவர்கள் இருந்த ஒரு சபையில் ஒரு சிறுமி கவிதை பாடும் பொழுது “எங்களில் ஒரு நபி இருக்கிறார் அவர் நாளை நடப்பதனை அறிவார்” எனப் பாடிய பொழுது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அவள் பாடுவதை தடுத்து நிறுத்துமாறும் முன்னர் பாடியதை பாடுமாறும் கட்டளையிட்டார்கள். (புஹாரி-5147) காரணம், நபிகளார் அல்லாஹ்வின் பண்பாகிய மறைவானவற்றை அறிவார்கள் என்று அவள் பாடினாள். அதனால் தடுத்தார்கள். எனவே, நபியவர்களை எல்லை மீறி நபி என்ற அந்தஸ்த்தை தாண்டி பாடுவதோ, பேசுவதோ, எழுதுவதோ இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட காரியமாகும். அது ஒரு பொழுதும் புகழ்ச்சியாகாது. எனவே சுப்ஹான மவ்லிது நூல் நபிகளாரைப் புகழ்கின்றதா என்பதனைப் படித்துக் கொண்டு போகின்ற பொழுதே புரிந்து கொள்வீர்கள். வாருங்கள்! அதனை மிகத்தெளிவாக வரிக்குவரி பின்னால் நிரூபிக்கின்றேன்.

# கட்டுக் கதைகளின் தொகுப்பு நூல் சுப்ஹான மவ்லிது!

இஸ்லாத்தில் ஒரு முஸ்லிம் பின்பற்ற வேண்டிய அடிப்படை மூலாதாரம் குர்ஆனும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களுமே ஆகும். ஹதீஸ்கள் என்பது நபியவர்களைத் தொட்டும் நபிகளார் சொன்னார்கள், நபிகளார் செய்தார்கள், நபிகளார் அங்கீகரித்தார்கள் என்று வரக்கூடிய செய்திகளாகும். இதுவே ஹதீஸின் சுருக்கமான வரைவிலக்கணம். இப்படி நபிகளாரைத் தொட்டும் ஆதாரபூர்வமாக அறிவிப்பாளர் வரிசையில் எந்தவிதக் கோளாறுகளும் இல்லாமல் வருகின்ற செய்திகளையே ஒரு முஸ்லிம் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும். இவைகள் தவிர பலயீனமான செய்திகள் என்றும் நபியின் பெயரால் புனையப்பட்ட கட்டுக்கதைகள் என்றும் நிரூபனமான செய்திகளை இபாதத்தாக எடுத்துநடக்க யாருக்கும் மார்க்கம் அனுமதியளிக்கவில்லை அது அமலாக இருந்தாலும் நன்மை கிடைக்காது மாறாக நபியின் பெயரால் இட்டுக்கட்டிய பாவத்தேயே அவைகள் ஈட்டித்தரும். அல்லாஹ் சொல்லும் இவ்வசனத்தை நன்றாகக் கவனியுங்கள்..

“மு.ஃ.மின்களே! பாஸிக் (தீயவன்) எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டுவந்தால் அதனைத் தீர்க்க விசாரித்துக் கொள்ளுங்கள்” (49:06)

நபியவர்கள் தன் மீது பொய்களை இட்டுக்கட்டுபவர்களைப் பற்றி கூறுவதைப் பாருங்கள்.

“யார் என் மீது பொய்களை இட்டுக்கட்டுகின்றாரோ அவர் தனது இருப்பிடத்தை நரகில் ஆக்கிக்கொள்ளட்டும்” (புஹாரி-107-106-1299-முஸ்லிம்-03)

நபியின் மீது ஒரு சிறிய வரியை இட்டுக்கட்டினாலே போதும் அது அவரை நாளை மறுமையில் நரகிற்குக் கொண்டு சென்றுவிடும். ஆனால் இந்த சுப்ஹான மவ்லிதில் நபிகளாரின் பெயரால் எண்ணிலடங்காத பொய்யான கட்டுக்கதைகள் புனைந்துரைக்கப்பட்டுள்ளன. நான் அடுக்கடுக்காக பின்னாடி பதிவு செய்யவுள்ள அனைத்து செய்திகளும் எவ்வித அடிப்படைகளுமற்ற பலயீனமான இட்டுக்கட்டப்பட்ட செய்திகளே ஆகும். அதனை ஒரு மு.ஃ.மின் நம்பவும் கூடாது ஏற்று செயற்படுத்துவதும் பாவமே! இனி, அவைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

# இவ்வுலகில் முதன்முதல் படைக்கப்பட்டது நபிகளாரின் ஒளியா?

مَوَرُوِيَ أَنَّ أَوَّلَ مَا خَلَقَ اللهُ نُوْرَ مُحَمَّدٍ

**‘அறிவிக்கப்படுகின்றது: அல்லாஹ் முதன்முதல் படைத்தது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஒளியை ஆகும்’**

சுப்ஹான மவ்லிதின் 16ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள 01வது மிகப்பெரும் இட்டுக்கட்டப்பட்ட செய்தியே இதுவாகும்.

நபி (ஸல்) அவர்களைப் புகழ வேண்டும் என கற்பனை பன்னியவர்கள், நபிகளாருக்கு நபித்துவம் கிடைக்க முன்னாடியே அவரை சிறப்பிப்பதாக எண்ணி படைப்புகளில் முதல் படைப்பாக நபிகளாரின் ஒளியை இட்டுக்கட்டியுள்ளனர். முதலில் (ருவிய) “அறிவிக்கப்படுகின்றது” எனும் இவ்வார்த்தையே இந்த செய்தி ஆதாரமற்ற அடிப்படையற்ற செய்தி என்பதனை விளக்குகின்றது. நபி (ஸல்) அவர்களுக்கு தனித்துவ ஒளியொன்று இருப்பதாக நமக்கு சொன்னது யார்? இதனை ஒரு மு.ஃமின் நம்புவதாக இருந்தால் அல்லாஹ் குர்ஆனில் எங்காவது இது பற்றி சொல்லியிருக்க வேண்டும் அல்லது சம்மந்தப்பட்ட நபிகளார் அறிவித்திருக்க வேண்டும். இந்த இட்டுக்கட்டப்பட்ட செய்தி எந்த ஹதீஸ் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது? இது எந்த ஹதீஸ் கிரந்தங்களிலும் அறிவிப்பாளர் வரிசையோடு பதிவு செய்யப்படாத இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும். சிலர் இந்த செய்தி முஸன்னப் அப்துர் ரஸாக் எனும் கிரந்தத்தில் வருவதாக எழுதிவைத்துள்ளனர். ஆனால், இப்படி ஒரு செய்தி முஸன்னப் அப்துர் ரஸாக் கிரந்தத்தில் கிடையாது. பல இமாம்கள் இச் செய்தி பற்றி குறிப்பிடும் போது, இது எவ்வித அறிவிப்பாளர் வரிசைகளுமற்ற இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும் என தெளிவுபடுத்தியுள்ளார்கள். எனவேதான், நபியின் ஒளிதான் முதன் முதல் படைக்கப்பட்டது என வரக் கூடிய அத்தனை செய்திகளும் அடிப்படையற்றவையாகும். இப்படிப் பொய்யான செய்திகளை மக்களுக்குச் சொல்லி நபிகளாரைப் புகழ்வது புகழ்ச்சியாகுமா? எந்த நபி மீது இந்த செய்தியை சுப்ஹான மவ்லிதில் இட்டுக்கட்டினார்களோ அந்த நபிகளாரே உலகில் முதன்முதலாக படைக்கப்பட்டது எது என்பதனை கூறும் ஆதாரபூர்வமான செய்தியை இதோ பாருங்கள்..

உப்பாதத் இப்னு ஸாமித் (ரழி) அறிவிக்கிறார்கள் : நபிகளார் கூற நான் செவிமடுத்தேன் நபியவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக அல்லாஹ் முதலில் படைத்தது எழுதுகோலை ஆகும், பின்னர் (அல்லாஹ்) அதற்கு (பேனாக்கு) எழுது என கூறினான் (அதற்கு) எழுதுகோல் கூறியது : என் இரட்சகா எதனை நான் எழுதட்டும்? அல்லாஹ் கூறினான் மறுமை நாள் நிகழும் வரைக்குள்ள அனைத்தினதும் கத்ரை (நிர்ணயத்தை) எழுது (என்று). (அபூதாவுத் - 4700)

அல்லாஹ் முதன் முதலாகப் பேனையைப் படைத்ததாகச் சொல்லும் பொழுது எப்படி ஓர் ஒளி, முதலாவது படைக்கப்பட்டிருக்க முடியும்? நபியவர்கள் முன்னுக்கு பின் முரணாகப் பேசக் கூடியவர்களா? அல்லது அல்லாஹ் முன்னுக்கு பின் முரணாக பேசக்கூடியவனா? எனவே, வாசகர்களே! இது சுப்ஹான மவ்லிதில் உள்ள நபியவர்கள் மீது இட்டுக்கட்டப்பட்ட எவ்வித ஆதாரங்களுமற்ற பொய்யான செய்தி ஆகும். நடுநிலைக் கண் கொண்டு தொடர்ந்து படியுங்கள்!

## ஆதம் நபியின் படைப்புக்கு 2000 வருடங்களுக்கு முன் நபிகளாரின் ஒளி படைக்கப்பட்டதா??

وَأَوْجَدَ نُوْرَهُ قَبْلَ خَلْقِ آدَمَ بِأَلْفَيْ عَام   وَكَانَ نُوْرُه يُسَبِّح اللهَ الوَاحِدَ القَهَّارَ

سلوتُسَبِّحُ بِتَسْبِيْحِهِ المَلائِكَةَ الأَبْرَارُ   فَلَمَّا خَلَقَ اللهُ تَعَالى آدَمَ عَلَيْهِ السَّلامَ

اِنْتَقَلَ ذٰلِكَ النُّوْرُ إِلَيْهِ وَصَارَ مَحْفُوظا لَدَيْهِ

**‘ஆதம் நபியைப் படைக்க 2000 வருடங்களின் முன் முஹம்மது நபியவர்களின் ஒளியைப் பெற்றுக் கொண்டார்கள் (முஹம்மது) நபியின் ஒளி அடக்கியாள்பவனும் ஒருமையாளனுமான அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்துகொண்டிருக்கின்றது. நபிகளாரின் ஒளி செய்யும் தஸ்பீஹை (பின் தொடர்ந்து) நல்லடியார்களான மலக்குமார்கள் தஸ்பீஹ் செய்கின்றார்கள் அல்லாஹ் ஆதம் நபியைப் படைத்த போது (முஹம்மது நபியின்) அந்த ஒளி ஆதம் நபிக்குள் புகுந்து பாதுகாக்கப்பட்டதாகிவிட்டது.’**

இவ் வரிகள் சுப்ஹான மவ்லிதின் 09 ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள மேலே குறிப்பிட்ட 01வது கட்டுக்கதையின் 02ஆம் தொடராகும்.

ஆதம் நபியைப் படைப்பதற்கு 2000 வருடங்களுக்கு முன் நபியின் ஒளி படைக்கப்பட்டது என்றால் அதற்கு என்ன ஆதாரம்? இப்படியொரு சம்பவம் நடந்திருந்தால், அதனைச் சம்மந்தப்பட்ட நபியவர்கள் சொல்லியிருக்க வேண்டும். அதனை ஸஹாபாக்கள் எமக்கு ஆதாரபூர்வமான முறையில் அறிவித்திருக்க வேண்டும். இந்த செய்தி உலகிலுள்ள எந்த ஹதீஸ் கிரந்தத்தில் பதியப்பட்டுள்ளது? எங்குமே கிடையாது. இப்படி எங்குமே ஆதாரபூர்வமாக இடம்பெறாத இந்த செய்தி எப்படி சுப்ஹான மவ்லிதில் வந்திருக்க முடியும்? இதுவே, இந்நூல் கண்ணுக்கு மை அழகு கவிதைக்குப் பொய் அழகு எனும் கவிதையை மெய்ப்படுத்த போதுமானதாகும்.

நபியவர்களுக்குப் பிரத்தியேக ஒளியொன்றை அல்லாஹ் வழங்கவில்லை என்கின்ற பொழுது எப்படி ஒளி அல்லாஹ்வைத் தஸ்பீஹ் செய்யும்? வானம், பூமி அதிலுள்ளவைகள் அல்லாஹ்வை துதி செய்கின்றன என அல்லாஹ் கூறுவது போல் நபியின் ஒளியும் துதி செய்கின்றது என எங்காவது கூறுகிறானா? என்றால் இல்லை நபியின் ஒளியைப் பின் தொடர்ந்து மலக்குமார்கள் தஸ்பீஹ் செய்தார்கள் என்றால், அல்லாஹ்வின் கட்டளைப் படி இயங்குகின்ற மலக்குமார்களுக்கு இது யார் இட்ட கட்டளை? அதற்கு என்ன ஆதாரம்?

மலக்குமார்கள் யாரையும் பின் தொடர்ந்து அல்லாஹ்வைப் புகழவில்லை என குர்ஆன் மிகத்தெளிவாக இந்தப் பொய்யை எழுதியோருக்கு பதிலடி கொடுப்பதனைப் பாருங்கள்.

“இன்னும் (இறைவா! மக்குமார்களான) நாங்களோ உன் புகழ் பாடியவர்களாக உன்னைத் துதித்து உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கின்றோம்” (02:30)

அல்லாஹ் இவ்வசனத்திலோ அல்லது இது போன்ற வசனங்களில் எங்குமே மலக்குமார்கள் நபியின் ஒளியை பின்பற்றி தஸ்பீஹ் செய்கின்றார்கள் என்று கூறவில்லை. அவர்கள் யாரையும் பின் தொடராமல் தாமாகவே அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரம் தஸ்பீஹ் செய்கின்றார்கள் என்றே கூறுகின்றான்.

அடுத்து ஆதம் நபியை படைத்தவுடன் முஹம்மது நபியின் ஒளி ஆதமின் உடம்பினுள் புகுந்தது என்ற செய்தியை சொன்னது யார்? அல்லாஹ்வா? ஆதம் நபியா? முஹம்மது நபிகளாரா? இந்த செய்தியும் எந்த ஹதீஸ் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது? எனவேதான், வாசகர்களே! இப்படியான பொய்களைச் சொல்லித்தான் நபியைக் கண்ணியப்படுத்த வேண்டும் என்ற எந்தத் தேவையும் நமக்கில்லை. இவைகளை நம்பி ஈமானை இழக்காமல் தூய்மையாகப் பாதுகாக்கப்பட்டுள்ள குர்ஆனையும் ஸஹீஹான ஹதீஸ்களையும் படியுங்கள்.

## முஹம்மது நபியின் ஒளியினால் அல்லாஹ் எதையேனும் படைத்தானா?

رَمورُوِيَ أنَّ نُوْرَ العَرْش وَالكُرْسِيِّ وَاللوْح وَالقَلَم وَالشَّمْس وَالقَمَر

ٱلخُلِقَ مِنْ نُوْر مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّم

**அறிவிக்கப்படுகின்றது : ‘அர்ஷ், குர்ஸிய்யு (எனும் சிம்மாசனம்), லவ்ஹ் (எனும் ஏடு) பேனை, சூரியன், சந்திரன் ஆகியவற்றின் ஒளி முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஒளியிலிருந்து படைக்கப்பட்டதாகும்’**

சுப்ஹான மவ்லிதின் 17ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு செய்திகளினதும் 03வது இட்டுக்கட்டப்பட்ட தொடர் இதுவாகும்.

முதலில் (றுவிய) “அறிவிக்கப்படுகின்றது” எனும் இவ்வார்த்தையே இந்த செய்தியும் ஆதாரமற்ற அடிப்படையற்ற செய்தி என்பதனை விளக்குகின்றது. முஹம்மது நபியின் ஒளியிலிருந்துதான் இந்த 06 படைப்புக்களும் படைக்கப்பட்டதென்றால் இதற்கு என்ன ஆதாரம்? இச்செய்தியும் உலகிலுள்ள எந்த ஹதீஸ் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது?

அல்லாஹ் குர்ஆனில் (10:05) (71:16) ஆகிய வசனங்களில் சூரியன் சந்திரனுக்கு பிரகாசிக்கும் ஒளியை அவனே படைத்ததாகச் சொல்கின்றான். ஆனால், பேனை, அர்ஷூ, குர்ஸிய்யு, லவ்ஹ் இவைகளுக்கு ஒளி உண்டா? அப்படி இருக்குமானால் அது குர்ஆனிலும் ஆதாரபூர்வமாக ஹதீஸ்களிலும் எங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது? குர்ஆன் ஹதீஸில் ஆதாரபூர்வமாக இடம்பெறாத இந்த செய்தி நபியின் மீது இட்டுக்கட்டப்பட்ட அடிப்படையற்றதாகும்.

அல்லாஹ் குர்ஆனில் அர்ஷ் மற்றும் வானம், பூமி, சூரியன், சந்திரனை நானே படைத்தேன் எனக் கூறும் மிகத்தெளிவான வசனத்தை பாருங்கள். “அவன் தான் மகத்தான அரியாசனத்தின் (அரசன்) அதிபதி என்று (நபியே!) நீர் கூறுவீராக!” (09:129)

“இன்னும் அவனே இரவையும் பகலையும் சூரியனையும் சந்திரனையும் படைத்தான். அவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய (பாதைகளில்) நீந்துகின்றன.” (21:33) (07:54)

அல்லாஹ் தன்னுடைய படைப்புகள் பற்றி சிலாகிக்கும் போது அவைகள் சில மூலப் பொருட்களால் படைக்கப்பட்டது என்கிறான். ஆதம் நபியை களிமண்ணாலும் மலக்குமார்களை ஒளியினாலும் ஜின்களை நெருப்பாலும் படைத்ததாக சிலாகிக்கின்றான். இது போன்று குர்ஆன் ஹதீஸில் எங்கும் முஹம்மது நபியின் ஒளியால் இந்த 06 வஸ்துக்களையும் படைத்ததாக ஒரு செய்தியை கூட ஆதாரபூர்வமாக எம்மால் காண முடியாது. அல்லாஹ் ஒளியால் படைத்த ஒரே படைப்பு மலக்குமார்கள் மட்டுமே அதுவும் நபியின் ஒளியில் இருந்தல்ல.

## இப்றாஹிம் நபியையும் நூஹ் நபியையும் நபிகளாரின் ஒளியா காப்பாற்றியது?

وَكَانَ نُوْرُ نَبِيِّنَا مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِيْ صُلْبِ نُوْحٍ فِيْ السَّفِيْنَةِ فَسَلِمَتْ وَقَطَعَتْ بِحَارًا وَلُجَجًا

وَكَانَ نُوْرُهُ فِيْ صُلْبِ إِبْرَاهِيْمَ عَلَيْهِ السَّلَام فَصَارَتْ النَّار لَهُ بَرْدًا وَسَلامًا وَبِبَرَكَتِهِ نَجَا

**‘(ஆதம் நபியிலிருந்து வெளியேறிய) முஹம்மது நபியின் ஒளி நூஹ் நபியின் முள்ளந்தண்டில் அவர் கப்பலில் உள்ள போது இருந்தது அதனால் அவர் (வெள்ளப் பிரளயத்திலிருந்து) வெற்றிபெற்றார். (கப்பல்) கடல்களையும் அலைகளையும் ஊடறுத்துச் சென்றது. மேலும், (முஹம்மத்) நபிகளாரின் ஒளி (நெருப்புக் குண்டத்தில் உள்ள போது) இப்ராஹீம் நபியின் முள்ளந்தண்டில் இருந்தது. ஆதலால் நெருப்பு (இப்ராஹீமு) க்கு குளிராகவும் சாந்தியாகவும் மாறியது. (நபியின் ஒளி) யின் பரகத்தால் (இப்றாஹீம் நபி) வெற்றி பெற்றார்’**

சுப்ஹான மவ்லிதின் 10, 19, 20 ஆம் பக்கங்களில் எழுதப்பட்டுள்ள 04வது இணைவைப்பை ஏற்படுத்தும் கட்டுக்கதை இதுவாகும்.

ஆதம் நபியின் உடம்பில் பாதுகாக்கப்பட்ட நபிகளாரின் ஒளியை அல்லாஹ், நூஹ் நபி கப்பலில் இருக்கின்ற பொழுது நூஹ் நபியின் முள்ளந்தண்டிற்கு மாற்றினானாம் நபியின் ஒளி அவரின் உடம்பில் இருந்த காரணத்தினாலேதான் நூஹ் நபி வெள்ளப் பிரளயத்திலிருந்து வெற்றிபெற்றாராம். முதலில் இது எந்த ஹதீஸ் கிரந்தத்தில் பதிவு

செய்யப்பட்டுள்ளது? முஹம்மது நபியின் ஒளி நூஹ் நபியின் உடம்பில் இல்லை என்றிருந்தால் நூஹ் நபி வெள்ளத்தில் மூழ்கியிருப்பாரா? இது என்ன நம்பிக்கை?

குர்ஆனில் அல்லாஹ் நூஹ் நபியின் செய்தியை சொல்லுகின்ற பொழுது அல்லாஹ்தான் கப்பலைக்கட்டச் சொன்னதாகவும் அவன்தான் நூஹ் நபியைக் காப்பாற்றியதாகவும் சொல்கிறான்.

“அப்போதும் அவர்கள் அவரை பொய்யரெனவே கூறினர் எனவே நாம் அவரையும் அவருடன் இருந்தவர்களையும் கப்பலில் (ஏற்றிக்) காப்பாற்றினோம். இன்னும், நம் வசனங்களைப் பொய்யெனக் கூறியோரை (பிரளயத்தில்) மூழ்கடித்தோம். நிச்சயமாக அவர்கள் (உண்மை காண முடியாத) குருட்டுக் கூட்டத்தாராகவே இருந்தனர்.” (07:64) (11:37)(10:73)

இப்படி நான்தான் நூஹை காப்பாற்றினேன் என்று அல்லாஹ் சொல்கின்ற வசனங்களில் எங்கும் முஹம்மது நபியின் ஒளிக்காகத்தான் காப்பறியதாக ஒரு வசனத்தைக் கூட யாராலும் காட்ட முடியாது.

அது மட்டுமின்றி இப்றாஹீம் நபியையும் அல்லாஹ் நபியின் ஒளி உடம்பிலிருந்த காரணத்தினால்தான் நெருப்புக் குண்டத்திலிருந்து பாதுகாத்தானாம். அப்படியெனில், முஹம்மது நபியின் ஒளி இல்லையென்றால் இப்றாஹீம் நபி எரிந்து சாம்பலாகியிருப்பாரா? இது என்ன நம்பிக்கையை விதைக்கின்றது வாசகர்களே! சற்று சிந்தியுங்கள்! அல்லாஹ் எதற்காகவுமின்றி தானே காப்பற்றியதாக சொல்லும் இந்த வசனத்திற்கு என்ன சொல்லப் போகின்றார்கள் இந்த சுப்ஹான மவ்லிதைப் பாடுகின்ற தோழர்கள்?

“(இப்றாஹீம் தீக்கிடங்கில் எறியப்பட்டவுடன்) நெருப்பே! இப்றாஹீம் மீது நீ குளிர்ச்சியாகவும் சுகமளிக்கக் கூடியதாகவும் ஆகிவிடு என்று நாம் கூறினோம்” (21:69)

இப்படி அல்லாஹ் தெளிவாகக் கூறுகின்ற பொழுது இந்தக் கட்டுக்கதையை ஒருவர் நம்பினால் அது முஹம்மது நபி (ஸல்) அவர்களை மிகவுமே உயர்த்தி மற்றைய நபிமார்களைத் தரம் தாழ்த்துவதாக அமையாதா? முஹம்மது நபியின் ஒளியைக் கண்ணியப்படுத்தவே இந்த செய்தி யாராலோ இட்டுக்கட்டப்பட்டுள்ளது. நூஹ் நபி மற்றும் இப்ராஹீம் நபி செய்த தியாகங்கள் எண்ணிலடங்காதவை. இப்றாஹீம் நபியை அல்லாஹ் தன் உற்ற நண்பனாக எடுத்துக் கொண்டதாக குர்ஆனில் வர்ணிக்கின்றான் அப்படிப்பட்ட பொன் எழுத்துக்களால் பதியப்பட வேண்டிய வரலாற்றின் சொந்தக்காரர்களை அல்லாஹ்வால் நேரடியாக காப்பாற்ற முடியாதென்றால் அவனின் வசனங்கள் பொய்யானவைகளா? இப்படியான நம்பிக்கை எவ்வளவு ஆபத்தானது என்பதனைப் படிக்கும், மவ்லிதை ஓதக் கூடிய என் உறவுகள் சிந்திக்க வேண்டும்!

## முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இல்லை என்றால் ஆதம் நபி படைக்கப்பட்டிருக்க மாட்டாரா?

وَيُرْوَى أَنَّ آدَمَ عَلَيْهِ السَّلام لَمَّا فَتَحَ عَيْنَيْهِ رَاى عَلى بَاب الجَنَّةِ مَكْتُوْبًا لا إِلهَ إلا اللهُ مُحَمَّدٌ رَسُوْلُ الله
فَقَالَ يَا رَبِّ مَنْ هَذا الذيْ قرَنْتَ إِسْمَهُ بإِسْمِكَ فقَالَ اللهُ تبَارَكَ وَتَعَالى يَا آدَمُ هَذا مِنْ وُلْدِكَ
أبْعَثُهُ آخِرَ الزَّمَان وَلَوْلاهُ مَا خَلَقْتُكَ

**அறிவிக்கப்படுகின்றது : 'ஆதம் அலைஹிஸ்ஸலாம் (படைக்கப்பட்டு) அவருடைய கண்களைத் திறந்த பொழுது, சுவனத்தின் கதவில் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டார். அப்பொழுது (ஆதம் நபி) கேட்டார் என்னுடைய இரட்சகனே! உன்னுடைய பெயரோடு இணைத்து (எழுதப்பட்டிருப்பவர்) யார்? அவ்வேளை அல்லாஹ் கூறினான். அது உன்னுடைய குழந்தை. கடைசிக் காலத்தில் அவரை (தூதராக) அனுப்புவேன். அவர் இல்லை என்றிருந்தால் உன்னை நான் படைத்திருக்க மாட்டேன்'**

சுப்ஹான மவ்லிதின் 09 ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள 05 வது கட்டுக்கதை இதுவாகும்.

இங்கும் (ருவிய) "அறிவிக்கப்படுகின்றது" எனும் இவ்வார்த்தை இந்த செய்தி ஆதாரமற்ற அடிப்படையற்ற செய்தி என்பதனை விளக்குகின்றது.

இப்படியான செய்திகள் அல் முஸ்தத்ரக் அல் ஹாகிம், தாரிகுத் திமஸ்க், பைஹகி, மு.ஃ.ஜமுஸ் ஸகீர் போன்ற கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், இந்த செய்திகள் அனைத்தும் ஆதாரத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாத மிகப் பலவீனமான செய்திகளாகும். இதன் அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறக் கூடிய அப்துர்ரஹ்மான் இப்னு ஸைத் இப்னி அஸ்லம் என்பவர் தனது தந்தையைத் தொட்டும் இந்த செய்தியை அறிவித்திருக்கின்றார். ஆனால், இவர் தனது தந்தையைத் தொட்டும் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளை அறிவிக்கக் கூடிய பலவீனமான அறிவிப்பாளர் என பல ஹதீஸ் கலை இமாம்களினாலும் விமர்சிக்கப்பட்டுள்ளார். இதனை இமாம் மிஸ்ஷி அவர்களுக்குரிய "த.ஃ.தீபுல் கமால் பீ அஸ்மாயிர்ரிஜால்" எனும் நூலில் 17 ம் பாகம் 114 ம் பக்கத்தில் காணலாம், மேலும் இமாம் இப்னு ஹஜர் அல்-அஸ்கலானி அவர்களுக்குரிய "த.ஃ.தீப்புத் த.ஃ.தீப்" எனும் நூலில் 06ம் பாகம் 117, 118, 119 ம் பக்கங்களில் காணலாம். இமாம் ஹாகிம் இவரை தந்தையைத் தொட்டும் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளை அறிவிப்பவர் என குற்றம் சாட்டியுள்ளார். அதுமட்டுமன்றி பல இமாம்கள் பைஹகி, உகைலி, அபு ஹாதம் அர்ராஸி, அஹ்மத் இப்னு ஹம்பல், யஹ்யா இப்னு மயீன், இப்னு ஹஜர் அல் அஸ்கலானி, புஹாரி, தஹபி, அலி இப்னுல் மதனி...... இன்னும் பலர் இந்த அறிவிப்பாளர் பலவீனமானவர் இவரை ஆதாரத்திற்கு எடுக்க முடியாது என விமர்சனம் செய்துள்ளனர்.

எனவேதான், இவராக ஒரு செய்தியை இட்டுக்கட்டி தன் தந்தையைத் தொட்டும் தனது தந்தை உமர் (ரலி) யிடம் கேட்டதாகவும் உமர் ரலி நபிகளாரைத் தொட்டும் அறிவிக்கின்ற மாதிரி ஒரு போலியான கட்டுக்கதையை அறிவித்திருக்கின்றார். இன்னும் இந்த செய்தியில் வரக்கூடிய வேறு சில அறிவிப்பாளர்கள் குறித்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்தக் கட்டுக்கதையைத்தான் இந்த சுப்ஹான மவ்லிதில் எழுதி வைத்துள்ளார்கள். உண்மையிலேயே இப்படி ஒரு செயல் நடந்திருந்தால் மிக ஆதாரபூர்வமாக இச்செய்தி நபிகளாரைத் தொட்டும் அறிவிக்கப்பட்டிருக்கும் ஆனால் எங்கும் இந்த செய்தியை ஆதாரபூர்வமானதாக எம்மால் காண முடியாது. ஹதீஸில் வருகிறது தானே என்று மக்களை ஏமாற்றும் உலமாக்கள் அந்த செய்திகள் ஸஹீஹானதா லயீபானதா என்பதையும் பார்ப்பது அவசியம்.

ஆனால், ஆதம் நபி படைக்கப்பட்ட வரலாற்றை அல்லாஹ் குர்ஆனின் 02வது அத்தியாயம் மற்றும் இன்னும் பல அத்தியாயங்களில் தெளிவாக விபரிக்கின்றான்.

“நிச்சயமாக நாமே உங்களைப் படைத்தோம். பின்பு உங்களுக்கு உருக்கொடுத்தோம் அதன் பின் ஆதமுக்கு ஸுஜுது செய்யுங்கள் (சிரம் பணியுங்கள்) என்று மலக்குமார்களிடம் கூறினோம். இப்லீஸைத் தவிர(மலக்குகள்) அனைவரும் (ஆதமுக்கு) தலைவணக்கம் செய்தார்கள். அவன் (மட்டும்) தலைவணக்கம் செய்தவர்களில் ஒருவனாக இருக்கவில்லை” (07:11) (02:30-35)

ஆதம் நபியைப் படைத்து உயிரளித்த அல்லாஹ், அடுத்து செய்த காரியம் மலக்குமார்களை சிரம்பணியச் சொன்னதேயாகும். ஆனால், எந்தவொரு வசனத்திலும் இந்தக் கட்டுக்கதை இடம்பெறவில்லை. நபியவர்களைத் தொட்டும் கூட ஆதாரபூர்வமான அறிவிப்புக்கள் எதுவுமில்லை. அப்படியிருக்க இதனை எப்படி ஒரு முஸ்லிம் ஏற்க முடியும்? இந்த மவ்லிதை ஓதும் என் நண்பர்கள்! சிந்திக்க வேண்டும்!!

இதன் இறுதியில் சொல்லப்படும் செய்தி மிக ஆபத்தானது. முஹம்மது நபி இல்லை என்றால் அல்லாஹ் ஆதம் நபியைப் படைத்திருக்க மாட்டேன் என்று ஆதம் நபியிடம் சொன்னானாம்”. இதனை யார் சொன்னது? ஆதம் நபி முஹம்மது நபியிடம் சொன்னாரா? இது நபியின் அந்தஸ்த்தை கூட்டி அல்லாஹ்வுடைய பண்பை குறைத்து எடை போடும் பாவமல்லவா? ஆதம் நபியை அல்லாஹ் முஹம்மது நபிக்காகப் படைக்கவில்லை. மனித சமூகத்தை உருவாக்கவே படைத்தான். அல்லாஹ் ஒன்றை நாடிவிட்டால் அதனைப் படைத்துவிடுவான். அவன் யாருடைய தயவையும் எதிர்பார்க்க மாட்டான் என்ற சிறு பிள்ளைக்குள்ள அறிவு கூட இல்லாமல் அல்லாஹ் மீதே இட்டுக்கட்டி இதனை எழுதி வைத்துள்ளார்களே! வாசகர்களே சற்று சிந்தியுங்கள்!

## ஆதம் (அலை) அவர்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களைக் கொண்டு வஸீலா தேடினார்களா?

ثُمَّ لَمَّا هَبط إلى الأَرْض قَالَ يَا رَبِّ بحَقِّ هَذا الوَلَدِ إغْفِرْ لِهَذا الوَالِدِ فَـتَوَسَّلَ بهِ آدَمُ إلى اللهِ

**‘பின்னர் ஆதம் (அலை) அல்லாஹ்வுக்கு மாறுசெய்த நிலையில்) பூமிக்கு இறங்கிய பொழுது என்னுடைய இரட்சகா! இந்தக் குழந்தையின் (முஹம்மதின்) ஹக்கைக் கொண்டு இந்த தந்தையை மன்னித்துவிடு என்று கூறினார். அவ்வேளை ஆதம் முஹம்மதைக் கொண்டு அல்லாஹ்விடம் வஸீலாத் தேடினார்.’**

சுப்ஹான மவ்லிதின் 09, 10 ஆம் பக்கங்களில் எழுதப்பட்டுள்ள 06 வது கட்டுக்கதையே இதுவாகும்.

ஆதம் நபி அல்லாஹ் தடுத்த மரத்தைப் புசித்து மாறு செய்தவுடன், அல்லாஹ் பூமிக்குச் செல்லுமாறு கட்டளையிட்டான். இந்தச் சம்பவம் முழுமையாகக் குர்ஆனில் தெளிவாகவே சொல்லப்படுகின்றது. ஆனால் பூமிக்கு வந்த ஆதம் நபி முஹம்மது நபியின் பெயரைக் கொண்டு பாவமன்னிப்புத் தேடியதாகவும் அல்லாஹ் அதனால் அவரை மன்னித்ததாகவும் ஒரு செய்தி கூட குர்ஆனிலோ ஆதாரபூர்வமான ஹதீஸ்களிலோ கிடையாது. இந்தக் கட்டுக்கதையை யார் சொன்னார்? ஒரு செய்தியைச் சொல்வதாக இருந்தால், அது உலகிலுள்ள ஏதாவது ஹதீஸ் நூல்களில் பதிவாகியிருக்க வேண்டும் இந்த செய்தி எந்த ஹதீஸ் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது? ஒரு நபியை இழிவுபடுத்தும் செய்தியே இதுவாகும். ஒரு நபிக்குப் பாவத்தை மன்னிப்பவன் அல்லாஹ் என்று தெரியாதா? பாவத்தை மன்னிக்கின்ற ஆற்றல் கொண்ட அல்லாஹ் இருக்கின்ற பொழுது முஹம்மது நபி (ஸல்) எதற்கு? அல்லாஹ் பின்வருமறு இந்தக் கட்டுக்கதையை எழுதியோருக்குப் பதிலடி கொடுக்கின்றான்.

“எவரேனும் தம் தீய செயலுக்காக மனம் வருந்தி, தம்மை சீர்திருத்திக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் அவருடைய பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்கிறான். நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனாகவும் கருனையுடையோனாகவும் இருக்கின்றான்”(05:39)

இது போன்ற வசனங்களில் நல்லடியார்களில் யாரையாவது வஸீலாவாக முன்வைத்துப் பிரார்த்தியுங்கள், அப்பொழுதுதான் நான் உங்களை மன்னிப்பேன் என அல்லாஹ் சொல்கின்றானா? ஆதம் நபி இணைவைத்ததாக இந்த மவ்லிது வரி சொல்கின்றதே வாசகர்களே! சற்று சிந்தியுங்கள்! உண்மையாகவே ஆதம் நபி எவ்வாறு பிரார்த்தனை செய்தார் என்பதனை அல்லாஹ் கூறுவதனைப் பாருங்கள்.

“பின்னர் ஆதம் தம் இறைவனிடமிருந்து சில வார்த்தைகளைக் கற்றுக்கொண்டார் (அவற்றின் மூலமாக இறைவனிடம் மன்னிப்புக் கோரினார்) எனவே இறைவன் அவரை மன்னித்தான் நிச்சயமாக அவன் மிக மன்னிப்போனும் கருணையாளனும் ஆவான்” (02:37)

“அதற்கு அவர்கள் (ஆதமும் ஹவ்வாவும்) எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்துக் கிருபை செய்யாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம் என்று கூறினார்கள்” (07:23)

இங்கு தெளிவாகவே ஆதம் அலை செய்த பிரார்த்தனை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் எங்கும் முஹம்மது நபியைக் கொண்டு வஸீலாத் தேடியதாக இடம்பெறவில்லை. ஆனால், இது அவ்லியாக்கள், மகான்களின் பெயர்களைக் கொண்டு உதவி தேட பின் வந்தோரால் இடைச்செருகப்பட்ட கட்டுக்கதையாகும்.

## நபியவர்கள் கருவரையில் பெயர் சூட்டப்பட்டார்களா?

ِأَتَاهَا آتٍ فِيْ الْمَنَام وَقَالَ لَهَا يَا آمِنَة إِنَّكِ قَدْ حَمَلْتِ

ا بِخَيْر الأَنَام شَمْس الفَلاح وَالهُدى فَإِذا وَضَعْتِهِ فَسَمِّيْهِ مُحَمَّدًا

**‘(நபிகளாரின் தாயாரின்) கனவில் ஒருவர் வந்தார். ஆமினாவே! நிச்சயமாக நீ வெற்றிக்கும் நேர்வழிக்கும் சூரியனான இவ்வுலகிலேயே சிறந்தவரைச் சுமந்திருக்கிறாய் என்று அவளுக்குக் கூறினார். பின்னர் அவரை நீ பெற்றெடுத்தால் முஹம்மத் என்று பெயர் சூட்டு என்றும் கூறினார்’**

சுப்ஹான மவ்லிதின் 11, 12 ஆம் பக்கங்களில் கூறப்பட்டுள்ள 07வது கட்டுக்கதை இதுவாகும்.

நபிகளாரின் தாயார் ஆமினா அவர்கள் இப்படியான ஒரு கனவு கண்டிருந்தால், அதனை அவர்கள் நபியிடம் சொல்லியிருக்க வேண்டும் அல்லது ஆமினா அம்மையாரின் காலத்தில் வாழ்ந்த யாராவது இதனை அறிவித்திருக்க வேண்டும். ஆனால், இப்படியான ஒரு செய்தியை நபியவர்கள் எங்காவது ஆதாரபூர்வமானதாக அறிவிக்கின்றார்களா என்றால் நிச்சயமாக இல்லை. இப்படியானதொரு செய்தி எந்த ஹதீஸ் நூல்களிலும் கிடையாது அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடும் போது

“முஹம்மத் அல்லாஹ்வின் தூதராவார்” (48:29) என்று குறிப்பிடுகின்றான் நபி (ஸல்) அவர்கள் தனது பொன்மொழியில்,

நிச்சயமாக எனக்குப் பெயர்கள் இருக்கின்றன. நான் முஹம்மத், நான் அஹ்மத், நான் மாஹி குப்ரை என் மூலம் அல்லாஹ் அழிக்கின்றான். நான் ஹாஷிர் என் பாதடியிலிருந்து மனிதர்கள் எழுப்பப்படுவார்கள் நான் ஆகிப் என்றார்கள்” (புஹாரி-4896)

நபி (ஸல்) அவர்களுக்கு முஹம்மத் என்று பெயர் வைக்கப்பட்டது உண்மை. ஆனால், தாயின் வயிற்றிலிருக்கும் போது வைக்கப்பட்டதாக வரும் இந்தச் செய்தியே பொய்யானதாகும்.

## நபியவர்களை ஆமினா அம்மையார் யாருக்கும் தெரியாமலா பெற்றெடுத்தார்கள்?

وَضَعَتْهُ آمِنَةُ وَلَمْ يَشْعُرْ بِهَا أَحَدٌ لِيُخْفَى عَنْ عُيُوْنِ الْحُسَّدِ

**‘பொறாமைக்காரர்களின் கண்களைவிட்டும் மறைப்பதற்காக, ஆமினா அவர்கள் யாரும் அறிந்திராத வகையில் (முஹம்மது) நபியவர்களை பெற்றெடுத்தார்கள்’**

சுப்ஹான மவ்லிதின் 40ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள 08வது இட்டுக்கட்டப்பட்ட செய்தியே இதுவாகும்.

யாருக்கும் தெரியாமல் நபிகளாரைத் தாயார் பெற்றெடுத்திருந்தால் அதனைப் பெற்றெடுத்த தாய் சொல்லியிருக்க வேண்டும் அல்லது பிறந்த குழந்தை சொல்லியிருக்க வேண்டும் இதனை யார் சொன்னார்? 1400 வருடங்களுக்கு முன் நடந்த ஒரு செயல் எந்த ஒரு ஹதீஸ் நூல்களிலும் பதியப்படாத போது 350 வருடத்திற்குள் தோன்றிய சுப்ஹான மவ்லிதில் மட்டும் இது எப்படிப் பதிவாகியது? இதன் ஆசிரியருக்கு வஹி வந்ததா? பொறாமைக்காரர்களின் கண்ணை விட்டும் பிறக்கும் போது மட்டும் மறைத்தால் போதுமா? குழந்தை வளர்கின்ற பொழுதும் பொறாமைக்காரர்கள் இருந்திருப்பார்களே? இதற்கு என்ன பதிலை இவர்களால் சொல்ல முடியும்? நபிகளாரை அளவுகடந்து புகழ நினைத்துத் தன்னிலையறியாமல் ஒரு கவிஞன் எழுதிய கட்டுக்கதைகளை இபாதத்தாக நினைத்து நாம் ஓதுகின்றோம் என்றால் மறுமையில் நமது நிலை என்னவாகும்? நபியின் மீது இட்டுக்கட்டியோர் தனது இருப்பிடத்தை நரகில் ஆக்கிக் கொள்ளட்டும் என நபிகளார் கூறிய செய்தியை மீண்டுமொரு முறை நினைவூட்டிக் கொள்கின்றேன்!

# நபியவர்கள் பிறக்கும் போதே கத்னா செய்யப்பட்டு பிறந்தார்களா?

وُلِدَ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ مَخْتُوْنٌ مَدْهُوْنٌ مَكْحُوْلٌ

**‘நபி (ஸல்) அவர்கள் கத்னா செய்யப்பட்டவர்களாகவும் எண்ணெய் இடப்பட்டவர்களாகவும் சுறுமா போடப்பட்டவர்களாகவும் பிறந்தார்கள்’**

சுப்ஹான மவ்லிதின் 40ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள 09வது ஆதாரத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாத பலயீனமான செய்தி இதுவாகும்.

நபியவர்கள் பிறக்கும் போதே கத்னா செய்யப்பட்டு பிறந்தார்கள் என்று “மு.ஃ.ஜமுஸ்ஸகீர்”, “மு.ஃ.ஜமுல் அவ்சத்”, “தாரிகுத் திமஸ்க்” போன்ற நூல்களில் செய்திகள் பதிவாகியுள்ளன. ஆனால், அவைகள் அனைத்தும் ஆதாரத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாத அடிப்படையற்ற பலவீனமானவைகளாகும். அந்த அறிவிப்பாளர் வரிசைகளில் இடம்பெற்றுள்ள சுப்யான் இப்னு முஹம்மத் அல் மிஸ்ஸீஸிய்யு என்பவர் இந்தச் செய்தியைத் தனித்து அறிவிக்கின்றார். இவரைப் பல இமாம்களும் ஆதாரத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாத, தூக்கி எறியப்பட வேண்டியவர் பலயீனமானவர் சில அறிவிப்பாளர்களைத் தொட்டும் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளை அறிவிப்பவர் என விமர்சித்துள்ளனர். இமாம் தபறானி, ஹைதமி, இப்னு அதீ, இப்னு ஹிப்பான், இப்னு ஹஜ்ர் அல்அஸ்கலானி, இமாம் அபூ நுகைம் போன்றோர் “ஹில்யா” எனும் நூலில் 3ம் பாகம் 24ம் பக்கத்திலும், “தலாயிலுன் நுபுவ்வா” எனும் நூலில் 110ம் பக்கத்திலும், “இப்னு அஸாகிர்” எனும் நூலில் 538ம் பக்கத்திலும் தெளிவுபடுத்தியுள்ளனர். எனவேதான் இந்தக் கருத்தில் பதிவாகியுள்ள அனைத்து செய்திகளும் பலயீனமானவைகளாகும். அதுபோன்றே நபியவர்கள் எண்ணெயிடப்பட்டு சுறுமா பூசப்பட்டு பிறந்தார்கள் என்கின்ற செய்தி உலகிலுள்ள எந்தவொரு ஹதீஸ் கிரந்தத்திலும் பதிவு செய்யப்படவில்லை. இது தெளிவாக நபியின் பெயரால் இட்டுக்கட்டப்பட்டதாகும். எனவே, ஒரு மு.ஃ.மினைப் பொருத்தவரைக்கும் நபி (ஸல்) அவர்கள் எல்லா மனிதர்களையும் போன்று கத்னா செய்யப்பட்டார்கள் என்றே நம்ப வேண்டும். இந்த ஆதாரமற்ற செய்திகளை நம்பி நபியின் மீது இட்டுக்கட்டிய பாவத்தை சுமக்காமல் எம்மை பாதுகாப்போம்.

# நபிகளார் பிறந்த வேளை மலக்குமார்கள் வந்து பார்வையிட்டார்களா?

ٍ وَأتَتْ مَلائِكَةَ السَّمَاء تَزُوْرُهُ وَتَنَالُ مِنْ رُؤْيَاهُ أشْرَفَ مَقْصَدِ
جَاؤُا بِإبْرِيْق وَطَشْتٍ رُصِّعَتْ جَنَبَاتُهُ مِنْ لُؤْلُوْءٍ وَزَبَرْجَدِ
ِدَغَسَلُوْا جَلاهُ وَخَتَمُوْهُ بِخَاتَم تَمَّتْ بِرُؤْيَتِهِ نُبُوَّة أحْمَدِ

**'வானலோக மலக்குமார்கள் (நபிகளார் பிறந்த வேளை) நபியவர்களைப் பார்வையிட வந்தனர். மேலும் நபியவர்களைப் பார்த்ததனூடாக உயரிய இலட்சியங்களை அடைந்து கொண்டார்கள். அவர்கள் (மலக்குமார்கள்) ஓரங்களில் முத்துக்களும் மரகதமும் பதிக்கப்பட்ட கோப்பையையும் சிறு குவளையையும் கொண்டுவந்தார்கள். (நபியவர்களின்) உடலைக் கழுவி இறுதி நபித்துவ முத்திரையிட்டார்கள். அதனைக் காண்பதின் மூலம் அஹ்மதின் நபித்துவம் முழுமை அடைந்தது'**

சுப்ஹான மவ்லிதின் 41ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள 10 வது கட்டுக்கதை இதுவாகும்.

இப்படி ஒரு சம்பவம் உண்மையிலேயே நடந்திருக்குமானால் நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பார்கள். அப்படி நபிகளார் கூறியதாக ஒரு செய்தி கூட எந்த நூல்களிலும் பதிவு செய்யப்படவில்லை. அல்லாஹ்வுடைய கட்டளைக்கிணங்க பணிபுரியும் வானுலக மலக்குமார்கள் அல்லாஹ் எங்குமே இது பற்றி கூறாமல் உள்ள போது எப்படி நபியவர்களைத் தரிசிக்க வந்திருக்க முடியும்? அது மட்டுமன்றி மலக்குமார்களை இழிவுபடுத்தும் கதையாகவும் இது அமைந்துள்ளது மலக்குமார்கள் எவ்வித மனித தேவைகளும் அற்றவர்கள் என்பது ஒரு முஸ்லிம் நம்ப வேண்டிய நம்பிக்கை. ஆனால், இந்த சுப்ஹான மவ்லிது மலக்குமார்கள் வந்து நபிகளாரைப் பார்த்து தங்களின் உயரிய தேவைகளை அடைந்து கொண்டதாக சித்தரிக்கின்றது? இது எவ்வளவு ஆபத்தான நம்பிக்கை??? நபியைப் பார்த்தால் தேவைகள் நிறைவேறுமா? அப்படியானால் பல தேவைகளோடு இருந்த எத்தனை ஸஹாபக்களைப் பார்க்கிறோம் அவர்களும் நபியவர்களை நேரடியாகவே பார்த்தார்கள் அவர்களின் தேவைகள் ஏன் நிறைவேறவில்லை?

பல தேவைகளோடு இருந்த நபிகளாரின் மனைவிமார்களின் தேவைகள் ஏன் நிறைவேறவில்லை? அடுத்து, பிறந்தவுடன் மலக்குமார்களால் நபியவர்கள் குளிப்பாட்டப்பட்டதாகவும் வந்த மலக்குமார்கள் இறுதி நபித்துவ முத்திரையைக் குத்தியதாகவும் இந்த மவ்லிது வரிகள் கூறுகின்றன. முதலில் இதற்கு எந்த ஆதாரமும் குர்ஆன் ஹதீஸில் கிடையாது. அடுத்து இதனை வாதிடக் கூடிய சகோதரர்கள் நபிகளாருக்கு நபித்துவம் பிறந்த உடனேயே வழங்கப்பட்டுவிட்டது என வாதாடுகின்றனர். நபி (ஸல்) அவர்கள் படைக்கப்படுவதற்கு முன்னரே அல்லாஹ்வால் நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லாஹ்வின் ஏட்டில் எழுதப்பட்டும் விட்டார்கள் என்பது நாம் நம்ப வேண்டிய நம்பிக்கை. ஆனால், இவ்வுலகில் அவர்களுக்கு நபித்துவப் பட்டம் வழங்கப்பட்டது 40 ஆவது வயதிலே ஆகும். அதற்கு முன்னர் சாதாரண மனிதர்கள் செய்கின்ற பாவங்களைப் போல் பாவம் செய்யாமல் அல்லாஹ்வால் பாதுகாக்கப்பட்டார்கள் என்பதே உண்மை. அல்லாஹ் குர்ஆனில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கைக் குழந்தையாக இருக்கும் பொழுதே தான் ஒரு நபி எனப் பேசியதாக (19:30) அத்தியாயத்தில் குறிப்பிடுகின்றான். இது போன்று நபியவர்கள் குழந்தையாக இருக்கின்ற பொழுது நபித்துவ முத்திரையிடப்பட்டார்கள் என ஓர் ஆதாரபூர்வமான செய்தியும் கிடையாது. இது நபியவர்களின் பிறப்பின் மீது சொல்லப்படும் தெளிவான இட்டுக்கட்டேயாகும்.

## நபியவர்கள் பிறந்தவுடன் மிஃராஜ் சென்றார்களா?

ِدَ نَـادَهُمُ الرَّحْمَانُ أَنْ طوْفُوْا بهِ          بالعَرْش مَعَ دَّار النَّعِيْم الأرْغَدِ

َّسَتُمَّ إعْرضُوْهُ عَلَـى الخَـلائِق كُلِّـهَا          مِنْ كُلِّ رُوْحَان وَكُلِّ مُجَسَّدٍ

**'(மலக்குமார்களை) அல்லாஹ் அழைத்து (குழந்தையாகவுள்ள முஹம்மது) நபியவர்களுக்கு அர்ஷையும் சுவனத்தையும் சுற்றிக் காண்பியுங்கள் பின்னர் உயிருள்ள உடலுள்ள அனைத்துப் படைப்பினங்களுக்கும் இவரை காட்டுங்கள் என்று கூறினான்.'**

சுப்ஹான மவ்லிதின் 41 ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள 11வது மகா பொய் இதுவாகும்.

இந்த செய்தியை யார் சொன்னார்? இது எந்த ஹதீஸ் நூலில் பதிவாகியுள்ளது? இதன் அறிவிப்பாளர் யார்? இதனை ஓதுகின்ற உலமாக்களால் ஆதாரம் காட்ட முடியுமா? நபியவர்கள் பிறந்தவுடனேயே நபியாக்கப்பட்டார்களா? இதில் என்ன சிறப்பைச் சொல்ல வருகிறார்கள்?

நபி (ஸல்) அவர்கள் வானுலக யாத்திரை (மி.்.ராஜ்) சென்றது 01தடவை என்றே குர்ஆனும் ஹதீஸும் நமக்குச் சொல்கின்றன இது தவிர நபிகளார் எப்பொழுதும் வானத்திற்குக் கொண்டு செல்லப்படவில்லை. ஆனால், இது சுப்ஹான மவ்லிதில் நபிகளாரின் பெயரில் எழுதப்பட்டுள்ள அப்பட்டமான பொய்யாகும். இவர்கள் மறுமையைப் பயந்தால் இதனை விட்டும் நீங்குவதைத் தவிர வேறுவழியில்லை?

## நபி பிறக்கும் முன்னே குர்ஆனில் அவர்களின் பெயர் அஹ்மத் என்று எழுதப்பட்டதா?

نأَنْتَ الذيْ سُمِّيْتَ فِيْ القُرْآن

أحْمَدَ مَكْتُوْبًا عَلَى الجنَان

**‘(நபியவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப்) (முஹம்மதே) நீங்கள்தான் குர்ஆனில் அஹ்மத் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளீர்கள் சுவர்க்கங்களிலும் இது எழுதப்பட்டுள்ளது’**

சுப்ஹான மவ்லிதின் 43, 44ஆம் பக்கங்களில் எழுதப்பட்டுள்ள 12வது பொய் இதுவாகும்.

நபியவர்கள் குழந்தையாக இருக்கும் பொழுது அவர்களை அப்துல் முத்தலிப் தூக்கியவுடன் நபி (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்களாம். அவ்வேளை அப்துல் முத்தலிப் கவிதை பாட ஆரம்பித்தார். அதில் ஒரு பகுதியே இதுவாகும். குர்ஆனில் அஹ்மத் என பெயர்சூட்டப்பட்டுள்ளீர்கள் என பாடினாராம். இதனை எமது புத்தி ஏற்கிறதா என்று சிந்தித்துப்பாருங்கள்! நபிகளார் பிறந்த போது குர்ஆன் இருந்ததா? இவர் நபி என்று அப்துல் முத்தலிப் எப்படி அறிந்தார்? இவருக்குக் குர்ஆன் வேதமாக கொடுக்கப்படும் என்பதை அப்துல் முத்தலிப் எப்படி அறிந்தார்? அப்படி அவர் நபியென அறிந்தால் அப்துல் முத்தலிப் ஏன் இஸ்லாத்தை ஏற்று அதனைப் பிறருக்கு எத்தி வைக்கவில்லை? சுவர்க்கத்தில் எழுதப்பட்டுள்ளதை அப்துல் முத்தலிப் எப்படி அறிந்தார்? அல்லாஹ் அவருக்கு வஹி அறிவித்தானா? சிறுபிள்ளைக்கு இருக்கும் அறிவு கூட இல்லாமல் இதனை எழுதி வைத்திருக்கின்றார்களே! இதற்கு என்ன ஆதாரம்? இந்தக் கட்டுக்கதை எந்த நூலில் பதிவாகியுள்ளது? பாமர மக்கள் தான் இதனை கருத்து விளங்காமல் ஓதுகின்றார்கள் என்றால் உலமாக்கள் ஏன் இவைகளை இன்னும் மக்களுக்குத் தெளிவுபடுத்தவில்லை? வாசகர்களே! சிந்தியுங்கள்...!

# நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்வாக சித்தரிக்கும் சுப்ஹான மவ்லிது

ஒவ்வொரு மு.:.மினும் பல மறைவானவற்றை ஈமான் கொண்டுள்ளோம். அதில் மிகப் பிரதானமானது அல்லாஹ்வைப் பற்றியதாகும். அல்லாஹ்வை நாம் கண்களால் காணாவிட்டாலும் அல்லாஹ் 07 வானங்கள் கடந்துள்ள அர்ஷ் எனும் சிம்மாசனத்தின் மேல் உயர்ந்துவிட்டான். அவனை இவ்வுலகில் யாரலும் காணமுடியாது. மறுமையில் மு.:.மீன்கள் பார்ப்பார்கள் என்று ஒவ்வொருவரும் நம்பிக்கை கொண்டுள்ளோம். அது போன்றே இவ்வுலகில் அனைத்தையும் படைத்தவன் அவனே, அனைத்துப் படைப்பினங்களுக்கும் உணவளிப்பவனும் அவனே, அவனின் அனுமதியின்றி இவ்வுலகில் எதுவும் நடக்காது, ஒரு மரத்தின் இலை உதிர்வதாக இருந்தாலும் சரியே, அவனே அனைத்துப் படைப்புகளையும் பாதுகாப்பவன், அவனே நோய்களை ஏற்படுத்துபவன் அதனை குணப்படுத்துபவன் அவனே கஷ்டங்களை நெருக்கடியை தருபவன் மீண்டும் அவனே அவைகளை நீக்குபவன், அவனே பாவங்களை சோதனைக்காகப் படைத்தவன் அவனே பாவமன்னிப்பை ஏற்பவன். இப்படி அனைத்துப் பண்புகளும் அவனுக்கு மட்டுமே உரியனவாகும் இவைகளில் ஒன்றையேனும் படைக்கப்பட்ட மனிதர்கள் செய்வார்கள் என்று யாராவது கடுகளவு நம்பினாலும், அது அல்லாஹ்வுக்கு மனிதனை நிகராக்கிய நிரந்தர நரகில் தள்ளும் இணைவைப்பாகும்.

ஆனால், நபிகளாரைப் புகழ்வதாகச் சொல்லி எழுதப்பட்டுள்ள இந்த சுப்ஹான மவ்லிது நூலில் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரிய மிக முக்கிய சில பண்புகள் நபி(ஸல்) அவர்களுக்கும் உண்டு என்று நபி(ஸல்) அவர்களை அல்லாஹ்வுடைய அந்தஸ்திற்கு உயர்த்தி, நபிகளாரை அல்லாஹ்வாகவே சித்தரித்து எழுதப்பட்டுள்ளது. எனவேதான் இந்த இணைவைப்பு நூலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதனைப் படிப்பவர்கள் தினமும் தன்னை அறியாமல் அல்லாஹ்வுக்கு இணைவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதன் பொருள் புரிந்து தம்மை நரகை விட்டும் பாதுகாத்துக் கொள்ளவே இதில் இடம்பெறும் முக்கியமான இணைவைப்பு வரிகளை உங்களுக்கு அதன் வாசகங்களோடு மொழி பெயர்த்து வழங்குகின்றோம்.

# நபி (ஸல்) அவர்களுக்கு பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டா?

أَنْتَ غَفَّارُ الخَطَايَا وَالذنُوْب المُوْبقَاتِ

**'(நபியவர்களே!) நீங்கள்தான் 'கப்பார்' பாவங்களை மிகவும் மன்னிப்பவர் இன்னும் பெரும் பாவங்களை மன்னிக்கக்கூடியவர்'**

சுப்ஹான மவ்லிதின் யா நபி ஸலாம் அலைக்கும் என்று இடம்பெறும் ஆரம்ப பைதில் 12 ஆம் பக்கம் எழுதப்பட்டுள்ள மிகப் பெரும் இணைவைப்பு வாசகம் இதுவாகும்.

(கப்பார்) பாவங்களை மிகவும் மன்னிப்பவன் என்ற பண்பு அல்லாஹ்விற்குரியதாகும். அல்லாஹ் குர்ஆனின் பல வசனங்களில் தானே பாவங்களை மிகவும் மன்னிப்பவன். தன்னிடமே பாவமன்னிப்பு தேடுங்கள் என்று குறிப்பிடுகின்ற பொழுது, நபியே நீங்கள்தான் எங்களின் பாவங்களை மிகவும் மன்னிப்பவர் என்று இந்த சுப்ஹான மவ்லிது கூறுகின்றதென்றால் இதை விட இணைவைப்பு வேறு என்ன வேண்டும்? அல்லாஹ் கூறுவதனைப் பாருங்கள்...

وَإِنِّيْ <u>لَغَفَّارٌ</u> لِمَنْ تَابَ وَآمَنَ وَعَمِلَ صَالِحًا ثُمَّ إهْتَدَى (20:82)

**'எவன் பாவமன்னிப்புத் தேடி ஈமான் கொண்டு நற்செயல்களையும் செய்து அப்பால் நேர்வழி அடைகின்றானோ அவனுக்கு நிச்சயமாக நான் <u>மிகவும் மன்னிப்பவனாக</u> இருக்கின்றேன்' (20:82)**

"(நூஹ் நபி கூறினார்) மேலும், நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள் நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன்"(71:10)

"எவர்கள் அறியாமையினால் தீமை செய்துவிட்டு பின்னர் மிக விரைவில் மன்னிப்புத் தேடிக் கொள்கிறார்களோ அவர்களுக்குத் தான் அல்லாஹ்விடத்தில் மன்னிப்பு உண்டு அல்லாஹ் அவர்களின் மன்னிப்பை ஏற்றுக்கொள்கிறான். இன்னும் அல்லாஹ் நன்கறிந்தோனும் ஞானம் உடையோனுமாக இருக்கின்றான்" (04:17)

மேலும் (38:66) (39:05) (40:42) (06:54) (16:119) இன்னும் பல வசனங்களில் அல்லாஹ் மட்டுமே பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் கொண்டவன் என்று கூறப்பட்டுள்ள பொழுது நபியவர்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்கியது யார்? இது அல்லாஹ்வுடைய வல்லமையை குறைத்து எடை போடுவதாக இதனைப் பாடுவோர் உணரவில்லையா? நபியவர்கள் பாவத்தை மன்னிப்பார்கள் என்றால் நீங்கள் செய்து கொண்டிருக்கும் பாவங்களை நபியவர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்களா? நபியவர்கள் பாவங்களை மன்னித்தால் அல்லாஹ் எதற்கு? நபியவர்கள் உயிரோடு இருக்கும் காலத்திலேயே பலர் பாவம் புரிந்தனர். யாராவது வந்து நபியவர்களே! எங்கள் பாவங்களை மன்னிப்பவர் நீங்கள்தான் என்று பாவமன்னிப்புத் தேடினார்களா? அல்லது தனது பாவத்திலிருந்து மீள என்ன வழி என வினவினார்களா? ஒரு முறை அபூபக்கர் (ரழி) அவர்கள் நபியவர்களிடம், தான் தொழுகையில் கேட்க ஒரு பிரார்த்தனையைக் கற்றுத்தருமாறு கேட்டார்கள் அதற்கு நபியவர்கள் கற்றுக்கொடுத்த துஆவைப் பாருங்கள்...

அபூபக்கர் (ரழி) அறிவிக்கின்றார்கள் : என்னுடைய தொழுகையில் நான் கேட்பதற்கு ஓர் துஆவை எனக்குக் கற்றுத்தாருங்கள் என்று நபி (ஸல்) அவர்களிடம் நான் கேட்ட போது, “இறைவா எனக்கு நான் பெருமளவு அநீதி இழைத்து விட்டேன். உன்னைத் தவிர பாவங்களை எவரும் மன்னிக்க முடியாது. எனவே, மன்னிப்பு வழங்குவாயாக! மேலும் எனக்கு அருள் புரிவாயாக! நிச்சயமாக நீதான் மன்னிப்பவனும் அருள் புரிபவனுமாய் இருக்கின்றாய்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்விடமே பாவமன்னிப்பைத் தேடுங்கள் எனக் கற்றுக்கொடுத்த நபிகளார், இணைவைப்பை ஒழிக்கவந்த நபிகளார், இந்த இணைவைப்பை போதித்திருப்பார்களா? சிந்தியுங்கள்! வாசகர்களே! இதனை நியாயப்படுத்த முற்படும் சகோதரர்கள் சொல்லக்கூடிய வாதம் என்னவெனில், ஸஹாபாக்களும் நபிகளாரிடம் மன்னிப்புக் கேட்டார்கள் தானே! இது இவர்களின் புரிதலில் ஏற்பட்ட கோளாறாகும். ஸஹாபாக்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்னர் நபிகளாரை திட்டினார்கள் துன்புறுத்தினார்கள் ஆதலால் இஸ்லாத்தை ஏற்றவுடனே நபியவர்களிடம் நாங்கள் உங்களுக்கு செய்த அநியாயங்களை மன்னித்திடுங்கள் எனக் கேட்டார்கள் நபிகளாரும் மன்னித்தார்கள். இது

மனிதன் மனிதனுக்கு செய்கின்ற அநியாயத்திற்கு அநீதி இழைக்கப்பட்டவனிடம் மன்னிப்புக் கேட்பதாகும். இல்லாவிடில், சம்மந்தப்பட்ட நபர் மன்னிக்காத வரை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். அதனாலேயே ஸஹாபாக்கள் நபிக்கு செய்த அநியாயத்திற்காக மன்னிப்புக் கேட்டார்கள். சரி, இவர்களின் வாதப்படி அப்படியே வைத்துக் கொண்டாலும் இப்பொழுது எங்கள் பாவங்களை மன்னிப்பவர் நீங்கள் தான் நபிகளாரே! என நீங்கள் படிக்க நீங்கள் நபியவர்களுக்கு என்ன பாவம் செய்தீர்கள்? ஆகவே இது மனிதனுக்கு செய்த பாவங்களக்கு மன்னிப்புக் கேட்கும் வாசகமல்ல. இறைவனிடம் கேட்க வேண்டிய பாவமன்னிப்பை நபிகளாரிடம் கேட்கும் வாசகமாகும். அதனைப் பின்வரும் மவ்லிது வரி நிரூபிக்கின்றது.

நபியவர்கள்தான் அழிவை ஈட்டித்தரக் கூடிய பெரும் பாவங்களை மன்னிப்பவராம். பெரும் பாவங்களை மன்னிப்பது யாருடைய அதிகாரம்? அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமானதல்லவா? நபிகளாருக்கு இந்த சக்தியை வழங்கியது யார்? ஓர் ஆதாரத்தையேனும் காட்டமுடியுமா? 07 பெரும்பாவங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள் என்று அவைகளை அடையாளப்படுத்திய நபிகளார், எங்காவது நான்தான் அவைகளை மன்னிப்பவர் எனக் கூறினார்களா? நபிகளாரால் இணைவைத்தவனை, விபச்சாரம் புரிந்தவனை, சூனியம் செய்தவனை, போரில் புறமுதுகு காட்டி ஓடுபவனை, ஒழுக்கமுள்ள பெண்கள் மீது படுதூறு சொல்பவனை அநியாயமாக ஓர் உயிரைக் கொன்றவனை, வட்டியை உண்பவனை, அநாதைகளின் சொத்தை உண்பவனைப் போன்ற பெரும்பாவங்களில் ஈடுபட்டோரை மன்னிக்க முடியுமா? அப்படியெனில் ஏன் விபச்சாரம் செய்தோரைக் கல்லெறிந்து தண்டனை கொடுத்தார்கள் நபிகளார்? மன்னித்திருக்கலாமே!? போருக்கு வாராத ஸஹாபாக்களில் சிலரை யாரும் இவர்களுடன் பேசக் கூடாது என ஏன் ஊர் பகிஸ்கரிப்பு செய்தார்கள்? தான் மன்னித்து விட்டதாக அல்லாஹ் வஹி அறிவிக்கும் வரை ஏன் தண்டனை கொடுத்தார்கள்? இந்த அனைத்து செய்திகளும் நபிகளாரால் சிறு பாவங்களையோ பெரும்பாவங்களையோ எதனையும் மன்னிக்க முடியாது அது அல்லாஹ்வுடைய அதிகாரம் என்பதனை தெளிவு படுத்துகின்றன. வாசகர்களே! சற்று சிந்தியுங்கள்!

எந்த நபியவர்களை அல்லாஹ்வாக சித்தரித்து இவர் பாவங்களை மன்னிப்பவர் என்று சுப்ஹான மவ்லிதில் எழுதி வைத்துள்ளார்களோ இவர்களுக்கு இந்த செய்தி கண்ணுக்கு புலப்படவில்லையா?

அபுஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள் : நபியவர்கள் சொல்ல நான் கேட்டேன் : அல்லாஹ் மீது ஆணையாக நான் ஒரு நாளைக்கு 70 தடவைகளுக்கும் மேலாக அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகிறேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி-6307)

நபி (ஸல்) அவர்களும் அல்லாஹ்விடமே பாவமன்னிப்பு தேடினார்கள். அப்படியிருக்க நபியவர்களால் எப்படி எமது பாவங்களை மன்னிக்க முடியும்? சிந்திப்போர் நேர்வழியடைவார்கள்.

## பாவங்களை மறைத்து அவைகளை அகற்றிடும் சக்தி நபியவர்களுக்கு உண்டா?

ِت أَنْتَ سَتَّارُ المَسَاوِيْ كَفِّرُوْا عَنِّيْ ذنُوْبِيْ وَاعْفُ لِيْ عَنْ سَيِّئَاتٍ

**'(நபியவர்களே!) நீங்கள்தான் பாவங்களை மறைப்பவர் (நபிகளாரே!) எனது பாவங்களை என்னைவிட்டும் அகற்றிடுங்கள் இன்னும் என் தீமைகளை அலட்சியம் செய்திடுங்கள்.'**

சுப்ஹான மவ்லிதின் 15 ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள நபியவர்களை அல்லாஹ்வின் தன்மை கொண்டவர் என சித்தரிக்கும் வாசகங்கள் இவைகளாகும்.

பாவங்களை மன்னிக்கும் ஆற்றல் கொண்டவன் அல்லாஹ் மாத்திரமே எனப் பார்த்தோம். அது போன்றே நாம் செய்யும் பாவங்களை மறைப்பவனும் அவனே! ஏனெனில் நாம் என்ன பாவம் செய்தோம், செய்து கொண்டிருக்கிறோம், உள்ளத்தால் செய்ய எண்ணியிருக்கிறோம் எனும் அனைத்தையும் அறிபவன் அவன் மட்டுமே! இதனை எப்படி நபி (ஸல்) அவர்களால் அறிய முடியும்? கோடான கோடி மக்கள் பாவம் செய்கின்றார்கள். அவர்களின் பாவங்களை மறைப்பதாக இருந்தால் அவர்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் அவதானிக்க வேண்டும் இது யாருடைய சக்தி? இதனை எப்பொழுது அல்லாஹ் நபி (ஸல்)

அவர்களுக்கு கொடுத்தான்? ஓர் ஆதாரத்தைக் காட்ட முடியுமா? ஆனாலும் இதனை நியாயப்படுத்தும் சகோதரர்கள் ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் பாவத்தை மறைக்க வேண்டும் தானே அதனால்தான் இப்படிப் பாடுகிறோம் என்கின்றனர். ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் குறைகளை மறைக்க வேண்டும் என்பது உண்மை. ஆனால், ஒருவரின் குறையை மறைப்பதாக இருந்தால் அவர் என்ன பாவம் செய்கிறார் என்பதனை அறிய வேண்டுமே! வேறு ஒரு உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நபிகளார் அதனை எப்படி அறிந்தார்கள்? நீங்கள் என்ன தவறு செய்கின்றீர்கள் என்பதனை நபிகளாரால் எப்படி அறிய முடியும் மறைப்பதற்கு? ஆனால், இந்த மவ்லிது வரிகள் இவர்கள் சொல்லும் காரணத்தை சொல்லவில்லை. மாறாக அல்லாஹ் மறைப்பது போலவே நபிகளாரும் எமது பாவங்களை மறைப்பவர் என்றே சொல்கின்றன. இந்த மவ்லிதை எழுதிய கவிஞனின் வார்த்தைகளைப் பொய்ப்படுத்தி அல்லாஹ்தான் பாவங்களை மறைப்பவன் என நபி(ஸல்) அவர்கள் கூறும் செய்தியைப் பாருங்கள்.

“அபுஹுறைரா (ரழி) அறிவிக்கின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன் “என்னுடைய ஒவ்வொரு உம்மத்தும் செய்யும் பாவங்கள் மறைக்கப்படுகின்றது. வெளிப்படுத்துபவர்களைத் தவிர, வெளிப்படுத்துபவர்களில் ஒரு மனிதர் இரவில் ஒரு (பாவமான) செயலைச் செய்கிறான். பின்பு அல்லாஹ் அந்த பாவத்தை மறைத்த நிலையில் காலையை அடைகின்றான். அவ்வேளை அவன் கூறுகின்றான் நண்பரே! நேற்றிரவு நான் இப்படி இப்படி (பாவம்) செய்தேன் என்று, இரவில் அவனுடைய ரப்பு பாவத்தை மறைத்தபடி இராத்தரித்தான் அல்லாஹ் மறைத்த அவனுடைய பாவத்தை வெளிப்படுத்தியவனாகக் காலையை அடைகின்றான்” (புஹாரி- 6069)

இந்த ஹதீஸ் எவ்வளவு தெளிவாக அனைவரது பாவங்களையும் அல்லாஹ்வே மறைக்கின்றான் என்று எடுத்துரைக்கின்றது. இந்த ஓர் ஆதாரம் போதாதா இந்த மவ்லிதை பொய்ப்படுத்த? அடுத்து இந்த மவ்லிது வரி சொல்கிறது நபியே என் பாவங்களை என்னை விட்டும் அகற்றிடுங்கள் என்று, இந்த அதிகாரத்தை அல்லாஹ் நபியவர்களுக்கு எப்பொழுது வழங்கினான்? ஒருவரின் பாவத்தை மன்னித்து அதனை அவனை விட்டும் நீக்கிடும் அதிகாரம் அல்லாஹ்வுடையதல்லவா? அதனை அல்லாஹ்வே தன் திருமறையில் மு.ஃ.மீன்களின் பிரார்த்தனையாகப் பின்வருமாறு எடுத்துரைக்கிறான்.

“எங்கள் இறைவனே! உங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று ஈமானின் பக்கம் அழைத்தவரின் அழைப்பைச் செவிமடுத்து நாங்கள் திடமாக ஈமான் கொண்டோம், எங்கள் இறைவனே! எங்களுக்கு எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களை விட்டும் அகற்றி விடுவாயாக! இன்னும் எங்களைச் சான்றோர்களுடன் கைப்பற்றுவாயாக!” (03:193)

## நபி (ஸல்) அவர்களுக்கு மறைவான ஞானம் உண்டா?

ىعَالِمُ سِرٍّ وَأَخْفَى

**‘(நபியவர்களே!) நீங்கள்தான் இரகசியமானவைகளையும் பரகசியமானவைகளையும் அறிபவர்’**

சுப்ஹான மவ்லிதின் 13ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள அடுத்த மாபெரும் இணைவைப்பும் நமது ஈமானைச் சீர்குழைக்கும் வாசகம் இதுவாகும்.

மறைவானவற்றை அறிவது என்பது அல்லாஹுத்தஆலா தனக்கு மட்டுமே உரிய பண்பாகக் குர்ஆனின் பல இடங்களில் வர்ணிக்கின்றான்.

“அவனிடமே மறைவானவற்றின் திறவுகோல்கள் இருக்கின்றன அவற்றை அவனையன்றி எவரும் அறியமாட்டார்கள், மேலும், கரையிலும் கடலிலும் உள்ளவற்றையெல்லாம் அவன் அறிவான். அவன் அறியாமல் ஒரு இலையும் உதிர்வதில்லை, பூமியின் (ஆழத்தில் அடர்ந்த) இருள்களில் கிடக்கும் சிறு வித்தும் பசுமையானதும் உலர்ந்ததும் (எந்தப் பொருளும்) தெளிவான (அவனுடைய) பதிவேட்டில் இல்லாமலில்லை.” (06:59)

“நபியே நீர் கூறுவீராக, உங்கள் உள்ளத்திலுள்ளதை நீங்கள் மறைத்தாலும் அல்லது அதை வெளிப்படுத்தினாலும் அதனை அல்லாஹ் நன்கறிகின்றான். இன்னும் வானங்களில் உள்ளதையும் பூமியில் உள்ளதையும் அவன் நன்கறிகின்றான் அல்லாஹ் அனைத்துப் பொருட்கள் மீதும் ஆற்றலுடையவன் ஆவான்” (03:29)

“இன்னும் மறைவானவற்றை எல்லாம் நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனாக இருக்கின்றான் என்பதையும் அவர்கள் அறியவில்லையா?” (09:78)

“கூறுவீராக, என்னுடைய இறைவன் நிச்சயமாக சத்தியத்தை மேலேற்றுகிறான் மறைவானவற்றையெல்லாம் அவன் நன்கறிந்தவன்” (34:48)

இன்னும் பல வசனங்கள் அல்லாஹ் மட்டுமே மறைவானவற்றின் சொந்தக்காரன் என்றிருக்க, எப்படி நபியவர்களால் மறைவானவற்றை அறிய முடியும்? ஒரு நபிக்கும் அல்லாஹ்வுக்கும் என்ன வித்தியாசமுண்டு? இதனை நமக்கு சொன்னது யார்? ஏதாவது ஆதாரமுண்டா? இது குர்ஆனின் பல செய்திகளை மறுக்கும் செய்தியாகாதா? சிந்தியுங்கள்! போதிய தெளிவின்றி மார்க்கத்தைப் படித்ததே இதன் விளைவாகும். நபி (ஸல்) அவர்கள் சில நேரங்களில் தஜ்ஜாலுடைய செய்தி மற்றும் மறுமை பற்றிய விடயங்கள் என யாரும் அறிந்திராத சில புது விடயங்களை ஸஹாபாக்களுக்குக் கூறுவார்கள். இது மறைவான ஞானமா என்றால் நிச்சயமாகக் கிடையாது. ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களுக்கு வஹியாக அறிவித்துக் கொடுப்பதன் காரணமாகவே அவ்வாறு சொன்னார்கள். அதுவொன்றே அவர் மனிதரானாலும் அல்லாஹ்வின் தூதர் என்பதற்கு அடையாளமாகும் இது போக சுயமாக ஒன்றை நபிகளாரால் மறைவான ஞானத்தைப் பயன்படுத்தி யூகித்து சொல்ல முடியுமா? என்றால் நிச்சயமாக முடியாது.

இப்படி நபிகளாரை அல்லாஹ்வின் தன்மை கொண்டவராக சித்தரித்து மவ்லிதை ஓதும் சகோதரர்கள்! நபி (ஸல்) அவர்கள் தான் மறைவானவற்றை அறிய மாட்டேன் என்று கூறும் வசனங்களைப் பாருங்கள்!

“(நபியே!) நீர் கூறும் அல்லாஹ் நாடினாலன்றி, நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ள சக்தியில்லாதவன். மறைவானவற்றை நான் அறிபவனாக இருந்திருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக் கொண்டிருப்பேன். (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னை தீண்டியிருக்காது நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும் நன்மாராயணம் கூறுபவனுமேயன்றி வேறில்லை” (07:188)

“நபியே நீர் கூறும் என்னிடம் அல்லாஹ்வின் பொக்கிஷங்கள் இருக்கின்றன என்று நான் உங்களிடம் கூறவில்லை மறைவானவற்றை நான் அறியமாட்டேன், நிச்சயமாக நான் ஒரு மலக்காக இருக்கின்றேன் என்றும் உங்களிடம் சொல்லவில்லை எனக்கு வஹியாக அறிவிக்கப்பட்டதைத் தவிர (வேறு எதனையும்) நான் பின்பற்றவில்லை. ,இன்னும் நீர் கூறும் குருடனும் பார்வையுடையவனும் சமமாவாரா? நீங்கள் சிந்திக்க வேண்டாமா?”(06:50)

நபி (ஸல்) அவர்களுக்கு மறைவான ஞானம் இருந்திருந்தால், யூதப் பெண்மணி ஆட்டிறைச்சியில் விஷம் தடவிக்கொடுத்தது எப்படித் தெரியாமல் போனது? உஹதுப் போரில் பல்லுடைக்கப்படும் என்பது தெரியாமல் போனது எப்படி? உஹது யுத்தத்தில் தனது படை தோல்வியுறும் என்பதனை அறிய முடியாமல் போனது எவ்வாறு? தாயிப் நகரில் கல்லெரி விழும் என்பது தெரியாமல் போனது எப்படி? க.்.பாவில் தொழும் பொழுது அழுகிய குடல்கள் தன் மேல் போடப்படும் என்பது தெரியாமல் போனது எப்படி? தொழுகையில் நிற்கின்ற பொழுது ஜீப்ரீல் அலை வந்து தெரியப்படுத்தும் வரை செருப்பில் இருந்த நஜீஸ் தெரியாமல் போனது எப்படி? தனது மனைவி விபச்சாரக் குற்றம் சாட்டப்பட்ட பொழுது அதனை வஹி வரும் வரை அறிய முடியாமல் போனது எவ்வாறு? ஓர் இரவில் பெரும் சத்தம் கேட்ட பொழுது அதனை தன் மறைவான ஞானத்தால் அறியாமல் நேரடியாக போய் பார்த்தது ஏன்? இன்னும் பல வரலாறுகளை இப்படிச் சொல்லலாம். இவைகள் அனைத்தும் மவ்லிதைப் பொய்ப்படுத்தி, நபி (ஸல்) அவர்களுக்கு மறைவான ஞானம் இல்லை என்பதனை மேலும் ஒருமுறை நிரூபிக்கின்றன.

## நபி (ஸல்) அவர்களைக் கொண்டு வஸீலா தேடலாமா?

اَللّهُمَّ إنَّا نَتَوَسَّلَ إلَيْكَ بِنَبِيِّكَ المُخْتَار

**'இறைவா! நிச்சயமாக நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உன்னுடைய (முஹம்மது ஸல்) அவர்களின் பொருட்டால் உன்னிடம் வஸீலா தேடுகின்றோம்'**

சுப்ஹான மவ்லிதின் 60 ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள அடுத்த இணைவைப்பு வார்த்தை இதுவாகும்.

அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிகின்ற பொழுது இறைவா! நபியவர்களின் பொருட்டால் கேட்கின்றேன் அல்லது ஒரு நல்லடியாரின் பெயரைச் சொல்லி அவரின் பொருட்டால் கேட்கின்றேன் என்று பிரார்த்திப்பதே சுருக்கமாக வஸீலா என்று சொல்லப்படும். இப்படி ஒரு முஸ்லிம் உலகை விட்டும் பிறிந்த நபிமார்கள் நல்லடியார்கள் யாரையாவது ஊடகமாகப் பயன்டுத்தி பிரார்த்திக்கலாமா? என்றால் அதற்கு மார்க்கத்தில் எந்தவிதமான அனுமதியும் கிடையாது.

படைப்பாளனும் சகல படைப்பினங்களும் புரிகின்ற செயல்களை அனுவளவும் தவறாமல் கண்கானிப்பவனாகவும் அல்லாஹ் இருக்கின்ற பொழுது ஒரு மு.்.மின் நபி (ஸல்) அவர்களை எதற்காக தனக்கும் அல்லாஹ்வுக்குமிடையிலான வஸீலாவாக எடுக்க வேண்டும்? அல்லாஹ் நாம் புரிகின்ற பிரார்த்தனையைச் செவியேற்க மாட்டானா? நாம் என்ன பாவங்களைச் செய்து தவ்பா செய்வதானாலும் அல்லது என்ன தேவைகளைக் கேட்பதானாலும் அதனை அல்லாஹ்விடம் மட்டுமே கேட்க வேண்டும், என்பது அல்லாஹ் நமக்கிடும் கட்டளையாகும். நமக்கு மட்டுமின்றி முன்வந்த அனைத்துத் தூதர்களும் எவ்வித வஸீலாக்களும் இல்லாமல் நேரடியாகவே அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள்.

ஹுூது நபி கூறிய கூற்று :

"என்னுடைய சமூகத்தார்களே! நீங்கள் உங்களுடைய இறைவனிடம் பிழை பொறுக்கத் தேடுங்கள் இன்னும் (தவ்பா செய்து) அவன் பக்கமே மீளுங்கள்..." (11:52)

ஹுஜப் நபி கூறிய கூற்று :
“ஆகவே உங்களுடைய இறைவனிடம் நீங்கள் மன்னிப்புக் கோரி இன்னும் அவனிடமே தவ்பா செய்து (அவன் பக்கமே) மீளுங்கள் நிச்சயமாக என்னுடைய இறைவன் மிக்க கிருபையுடையவனாகவும் பிரியமுடையவனாகவும் இருக்கின்றான் (என்று கூறினார்)” (11:90)

நூஹ் நபியின் கூற்று :
“மேலும் நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள் நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன் என்று கூறினேன்” (71:10)

இவ்வசனங்களில் எங்கும் பிரார்த்திக்கும் போது ஒருவரை வஸீலாவாக வைத்துப் பிரார்த்தியுங்கள் என்று முன்வந்த எந்த நபிமார்களும் சொல்லவில்லை அதுபோன்றே இறுதித் தூதர் நபி (ஸல்) அவர்களும் சொல்லவில்லை. இது நபிவழி அல்ல என்பதனை நடுநிலைவாதிகள் சிந்திக்க வேண்டும்! அல்லாஹ்விடம் நேரடியாக ஒருவர் பிரார்த்திக்க முடியாதென்றால் அவன் கடவுளாக இருப்பதில் என்ன அர்த்தம் உள்ளது?

ஆனாலும் இதனை நியாயப்படுத்தக் கூடிய சகோதரர்கள் ஸஹாபக்கள் நபியவர்களிடம் சிலவேளை வந்து தாங்களுக்காக பிரார்த்திக்குமாறு சொன்ன சில செய்திகளை ஆதாரமாகக் காட்டுகின்றனர். நபிகளாருடைய காலத்தில் மழை இல்லாத வேளைகளில் யாரஸுலல்லாஹ் எங்களுக்காக மழை வேண்டிப் பிரார்த்தியுங்கள் என்று ஸஹாபக்கள் கூறினார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் நபிகளார் பிரார்த்தித்தார்கள் அதே போன்று எனக்காக பிரார்த்தியுங்கள் என சில ஸஹாபக்கள் வினவிய பொழுது நபிகளார் பிரார்தித்தார்கள். இது எல்லோருக்கும் அனுமதிக்கப்பட்ட விடயமாகும். நாம் நமக்காக பிரார்த்திக்குமாறு ஒருவரிடம் சொல்லலாம். ஆனால், அவர் உயிருடன் சமகாலத்தில் வாழ்பவராக இருக்க வேண்டும் என்பதே நாம் இங்கு கவனிக்க வேண்டிய விடயமாகும். நபிகளார் உயிருடன் இருந்த பொழுதே ஸஹாபாக்கள் தங்களுக்காக பிரார்த்திக்குமாறு வேண்டினார்கள். நபிகளார் மரணித்த போது எந்த ஸஹாபக்களும் நபிகளாரின் கப்ரடிக்குச் சென்று பிரார்த்தனை புரியவில்லை. அப்படியொரு வழிமுறையை நபிகளார் காட்டித்தரவுமில்லை. எனவேதான் மரணித்து வேறு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நபிகளாரின் பொருட்டால் வஸீலாத் தேடுவதற்கு மார்க்கத்தில் எந்த ஓர் ஆதாரமும் இல்லை.

ஏன் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடிய நபிகளார் யாரை எந்த நபியை எந்த நல்லடியாரை வஸீலாவாக வைத்து பிரார்த்தித்தார்கள்? இந்த மவ்லிது கிதாப் தெளிவான வழிகேடு என்பதற்கு இவ்வளவு சான்றுகள் போதாதா?

## ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உதவிதேடி நபிகளாரிடம் பிரார்த்தித்தார்களா?

إِنِّـيْ إذا مَسَّنِيْ ضَيْمٌ يُرَوِّعُنِيْ أَقُوْلُ يَا سَيِّدَ السَّادَاتِ يَا سَنَدِيْ كُنْ لِيْ شَفِيْعًا إلى الرَّحْمَان مِنْ زُلَلِيْ

وَامْنُنْ عَلَـيَّ بمَا لا كَان فِيْ خَلَدِيْ وَانْظرْ بعَيْن الرِّضَا لِيْ دآئِمًا أَبَدًا

وَاسْتُرْ بطوْلِكَ تَقْصِيْرِيْ مَدَى الأَمَدِ وَاعْطِفْ عَليَّ بعَفْوٍ مِّنْكَ يَشْمَلُنِيْ

**ஜிப்ரீல் (அலை) கூறினார்கள் என்னை அச்சுறுத்தும் அளவுக்கு எனக்கு அநீதம் இழைக்கப்பட்டால் தலைவர்களுக்கெல்லாம் தலைவரே! (முஹம்மது நாயகமே!) என் உறுதுணையாளரே! என்று நான் அழைப்பேன். (நீங்கள்) என் குற்றங்களுக்காக இறைவனிடம் பரிந்துரையாளராக இருந்திடுங்கள். என் கற்பனையிலும் உதித்திராத அளவு எனக்கு உதவிடுங்கள். என்னை எப்பொழுதும் திருப்தியான கண் கொண்டு கவனித்திடுங்கள். என் குறைகளைக் காலங்காலமாக உங்களது அருள் கொண்டு மறைத்திடுங்கள். உங்கள் மன்னிப்பை என் மீது சொரிந்து அருள்புரிந்திடுங்கள்.**

சுப்ஹான மவ்லிதின் 65 ஆம் பக்கத்தில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பாடியதாக எழுதப்பட்டுள்ள ஜிப்ரீல் (அலை) அவர்களை கொச்சைப் படுத்தும் வாசகங்கள் இவைகளாகும்.

முஸ்லிம்கள் அனைவரும் தங்களது ஈமானில் மலக்குமார்களையும் சேர்த்தே ஈமான் கொண்டுள்ளோம். அந்த ஈமானில் அடங்குகின்ற பிரதான நம்பிக்கைகளாவன, அல்லாஹ்வால் படைக்கப்பட்ட மலக்குமார்கள் எவ்வித மனித தேவைகளுமற்றவர்கள். இன்னும் அல்லாஹ் இடும் கட்டளைகளுக்கு அனுவளவும் மாறு செய்யாமல் அவைகளைச் செவ்வனே நிறைவேற்றுவார்கள் என்பனவாகும்.

“மு.ஃ.மீன்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதன் எரிபொருள் மனிதர்களும் கல்லுமேயாகும் அதில் கடுமையான பலசாலிகளான மலக்குகள் காவல் இருக்கின்றனர். அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள். தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்துவருவார்கள்.”(66:06)

ஆனால், ஒரு கவிஞனால் எழுதப்பட்ட இந்த மவ்லிது வரி “பரிசுத்த ஆவி” எனும் புனைப்பெயர் கொண்டு அல்லாஹ் சிறப்பித்துக் கூறும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மீது பல அபாண்டங்களை அள்ளிவீசுகின்றது. பாவம் செய்து தனது பாவத்தை மறைக்க நபிகளாரிடம் ஜிப்ரீல் (அலை) உதவிதேடியதாகவும் அவருக்கு அநீதம் இழைக்கப்பட்டதாகவும் தனக்காக அல்லாஹ்விடம் பரிந்துரை செய்ய நபியவர்களை வேண்டியதாகவும் இவ்வரிகள் ஜிப்ரீல் (அலை) மீது இட்டுக் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கட்டுக்கதைக்கு என்ன ஆதாரம்? நபியவர்கள் இப்படியான ஒரு சம்பவத்தை எங்காவது சொன்னார்களா? இந்த செய்தி எந்த ஹதீஸ் கிரந்தத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது? எப்படி அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்ட ஒரு மலக்கால் பாவம் செய்ய முடியும்? அதிலும் குறிப்பாக அனைத்து நபிமார்களுக்கும் வஹியை கொண்டுவந்த ஜிப்ரீல் (அலை) பாவம் செய்யக் கூடியவர் என்றால் அவர் எடுத்துவந்த வஹியை எப்படி நம்ப முடியும்? ஒரு மலக்காக இருக்கக் கூடியவர் தனது பாவத்தை அல்லாஹ் பார்க்கின்றான் என்ற சாதாரண நம்பிக்கை கூட இல்லாமலா அவைகளை மறைக்குமாறு நபிகளாரிடம் பிரார்த்தித்தார்? வானுலகத்திலேயே அல்லாஹ்விற்கு மிக நெருக்கமாக இருக்கின்ற மலக்காகிய ஜிப்ரீல் அலை தனது பாவத்துக்காக அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடாமல் பூமியிலுள்ள நபிகளாரிடம் வர வேண்டிய தேவை என்ன? அப்படியெனில் ஒரு மலக்கு அல்லாஹ்விற்கு இணைவைத்திருக்கின்றார் என இவ்வரிகள் கூறுகின்றன.... பொதுமக்களே! சற்று இந்த மவ்லிதை அர்த்தம் தெரியாமல் ஓதுபவர்களின் நிலையை சிந்தித்துப் பார்த்தீர்களா? எவ்வளவு பெரிய இணைவைப்பை சாதாரண நான்கு வரிகளில் எழுதிவைத்துள்ளார்கள்.

## பிரார்த்தனைகளுக்குப் பதிலளிப்பது யார் அல்லாஹ்வா? அல்லாஹ்வின் தூதரா?

مُسْتَجِيْبُ الدَّعَوَاتِ

**‘(நபி ஸல் அவர்களே!) நீங்கள்தான் பிரார்த்தனைகளுக்கு பதிலளிப்பவர்!’**

يَا مَنْ تَمَادى وَاجْتَرَمْ    تُبْ وَاعْتَرِفْ وَارْجُ الكَرَمْ    وَلُذْ بِمَنْ حَلَّ الحَرَمْ

**‘குற்றமிழைத்து பாவம் புரிந்தவனே! தவ்பா செய்! பாவத்தை ஏற்றுக்கொள்! அருளை எதிர்பார்! ஹரம் கூஷீபில் அடக்கப்பட்டுள்ளவரிடம் நபி (ஸல்) அவர்களிடம் பாதுகாப்புத் தேடு!’**

“என் வாழ்க்கை நெருக்கடிக்கு உள்ளாகி விட்டது! எனவே, இந்த வாசல்படிக்கு (நபிகளாரின் அடக்கஸ்தலத்திற்கு வந்து விட்டேன்! நேசத்திற்குரிய தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் (உங்களுக்கு அருகில் அடங்கியுள்ள அபூபக்கர், உமர் அவர்களின்) திருப்பொருத்தத்தை நாட்டம் கொண்டு படிக்கட்டுகளை முத்தமிடுகின்றேன்!”

சுப்ஹான மவ்லிதின் 13, 19, 35 ஆம் பக்கங்களில் எழுதப்பட்டுள்ள நச்சுக்கருத்துக்கள் பொதிந்துள்ள வாசகங்கள் இவைகளாகும்.

மிகத் தெளிவாக எங்கள் பிரார்த்தனைகளுக்கு நபி (ஸல்) அவர்கள் பதிலளிப்பார்கள் என்ற இவ்வரிகள் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தான பண்பை நபிக்கு வழங்கும் இணைவைப்பாகும். எமது பிரார்த்தனைகளுக்கு பதிலளிப்பவன் அல்லாஹ் மட்டுமே அதனை எந்த நபியவர்கள் பதிலளிப்பார்கள் என்று சுப்ஹான மவ்லிதில் எழுதப்பட்டுள்ளதோ அவர்களாலேயே அல்லாஹ் சொல்லச் சொல்கிறான் பாருங்கள்!

நபியே என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சையமாக நான் சமீபமாகவே இருக்கிறேன். பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைகளுக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன். அவர்கள் என்னிடமே (பிரார்த்தித்து) கேட்கட்டும் என்னையே நம்பட்டும். அப்பொழுது அவர்கள் நேர்வழியை அடைவார்கள் என்று கூறுவீராக! (02:186)

அடுத்து பாவம் புரிந்தவர்கள் ஹரம் ஷரீபில் அடக்கப்பட்டுள்ள நபிகளாரிடம் தனது பாவத்தை உணர்ந்து பாவமன்னிப்புத் தேடுமாறு இவ்வரிகள் கூறுகின்றது இது மிகப்பெரும் இணைவைப்பாகும். பாவம் புரிந்தோர் மதீனாவில் அடக்கப்பட்டுள்ள நபியிடம் பாவமன்னிப்பு கேட்குமாறு கட்டளையிட்டது யார்? நபியவர்களின் இறப்பின் பின் நபியவர்கள் அடக்கப்பட்டுள்ள மதீனா நகரில் வாழ்ந்த ஸஹாபாக்களில் யாராவது நபிகளாரின் கப்றடியில் போய் இப்படி பிரார்த்தித்தார்களா? இன்று கூட ஹஜ் உம்ராவிற்குச் செல்லக்கூடியவர்கள் நபிகளாரின் அடக்கஸ்தலத்தை பார்வையிடலாம். ஆனால், யாரும் அங்கு கையேந்தவோ சுஜூது செய்யவோ முடியாது. அப்படி யாராவது முற்பட்டால் காவலாளிகள் அடித்துத் துரத்துவதைக் காணலாம். ஏனெனில், அப்படியொரு வழிமுறையை அல்லாஹ்வின் தூதர் காட்டித் தரவில்லை.

அடுத்ததாக கஷ்டங்களுக்கு ஆளாகியோர் நபியவர்களின் கப்றடிக்குச் சென்று படிகளை முத்தமிட்டு அபூபக்கர், உமர் ரலியல்லாஹுஅன்ஹுமா அன்னவர்களின் திருப்பொருத்தத்தை நாடி பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று இவ்வரிகள் கூறுகின்றன. நபிகளாரிடம் கேட்பதே இணைவைப்பாக இஸ்லாம் அடையாளப்படுத்துகின்ற பொழுது இந்த இரண்டு ஸஹாபாக்களிடமும் அதனை எப்படி எதிர்பார்க்க முடியும்? கப்றடியில் சென்று படிக்கட்டுக்களை முத்தமிடுவதென்றால் கப்ர்களுக்கு சுஜூது செய்யும் கலாச்சாரத்தை இந்த மவ்லிது பாடல்கள் சொல்லித்தருகிறது. யாராவது இவைகளின் பொருள் தெரிந்துதான் இவ்வளவு நாளாக ஓதினீர்களா? மனதில் கைவைத்துச் சொல்லுங்கள்!

## நபி (ஸல்) அவர்களால் நோய்களை குணப்படுத்த முடியுமா?

ماالسَّلَامُ عَلَيْكَ يَا مُبْرِيْ السَّقَام

**‘நோய்ளை நீக்குபவரே! (நபிகள் நாயகமே!) உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும்!’**

مولَوْ تَكُوْنَ سَقِيْمًا لَدَيْهِ بُرْءُ السَّقَام

**‘நீ நோயுற்று இருந்தால் நபி (ஸல்) அவர்களிடமே நோய்க்கான நிவாரணம் உண்டு’**

جَوَمَرِيْضًا أَنْتَ عَائِدُهُ قَدْ أَتَاهُ اللهُ بِالْفَرَج

**‘நீங்கள் நோயாளியைத் தரிசிக்கச் சென்றால் அல்லாஹ் நோயாளிக்கு நிவாரணமளித்து விடுவான்’**

சுப்ஹான மவ்லிதின் 05, 37, 23 ஆம் பக்கங்களில் எழுதப்பட்டுள்ள பெரும் இணைவைப்பு வரிகள் இவைகளாகும்.

அல்லாஹ் கடுகளவும் தன் அதிகாரத்தை யாருக்கும் கொடுக்க மாட்டான் அதில் பிரதானமானது நோய்களை குணப்படுத்தும் ஆற்றலாகும். இவ் அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. அல்லாஹ் இதனை குர்ஆனின் பல வசனங்களில் கூறுகின்றான்.

இப்றாஹீம் நபியின் கூற்று :
“நான் நோயுற்ற காலத்தில் அவனே என்னை குணப்படுத்துகிறான்”(26:80)

அய்யூப் நபியவர்களின் கூற்று :
“இன்னும் அய்யூப் தன் இறைவனிடம் நிச்சயமாக என்னை (நோயினாலான) துன்பம் தீண்டியிருக்கிறது. (இறைவனே) கிருபை செய்பவர்களிலெல்லாம் நீயே மிகக் கிருபை செய்பவனாக இருக்கின்றாய் என்று பிரார்த்தித்த போது” (21:83)

மேலும் பல வசனங்கள்
“மனிதனை (ஏதேனும் ஒரு) துன்பம் தீண்டுமானால், அவன் படுத்துக்கொண்டோ அல்லது உட்கார்ந்து கொண்டோ அல்லது நின்ற நிலையிலோ (அதனை நீக்குமாறு) நம்மிடமே பிரார்த்திக்கின்றான். ஆனால், நாம் அவனை விட்டும் அவனுடைய துன்பத்தை நீக்கிவிடுவோமானால் அவன் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்குவதற்கு நம்மை அழைக்காதது போலவே சென்று விடுகின்றான். வரம்பு மீறுவோருக்கு அவர்களுடைய செயல்கள் அழகாக்கப்பட்டு விடுகின்றன.” (10:12)

இப்படி பல வசனங்கள் நோய்களைக் குணப்படுத்துவது அல்லாஹ் மாத்திரமே என பறைசாற்றுகின்ற பொழுது, எப்படி அந்த அதிகாரத்தை நபியவர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருக்க முடியும்? அந்த அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் நபி(ஸல்) அவர்களுக்கு நோயே ஏற்பட்டிருக்கக் கூடாது. ஆனால், நபி(ஸல்) அவர்கள் கூட சில வேளை நோய்களால் பாதிக்கப்பட்டாரகள்.

“அப்துல்லாஹ் (ரழி) அறிவிக்கின்றார்கள் : நபிகளாருக்கு காய்ச்சல் ஏற்பட்டிருந்த போது அவர்களிடம் நான் சென்றேன்: இறைத்தூதர் அவர்களே தாங்கள் கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா? என வினவினேன். அதற்கவர்கள் ஆம், உங்களில் இருவருக்கு ஏற்படும் காய்ச்சல் எனக்கு ஏற்பட்டுள்ளது என பதிலளித்தார்கள்” (புஹாரி-5648)

சில வேளைகளில் நபியின் குடும்பத்தார் மற்றும் ஸஹாபாக்கள் நோய்களுக்கும் போர்களில் பலத்த காயங்களுக்கும் ஆளானார்களே அப்பொழுது ஏன் அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் நோய் நிவாரணம் வழங்கி காப்பாற்றவில்லை? மேலும், நோய்களைக் குணப்படுத்தும் அதிகாரம் நபிகளாருக்கு வழங்கப்படவில்லை என்பதனையும் அவர்கள் கூட அல்லாஹ்விடமே நோயைக் குணப்படுத்தப் பிரார்த்தித்தார்கள் என்பதனையும் பின்வரும் செய்தி எடுத்துரைக்கின்றது.

“ஆயிஷா (ரழி) அறிவிக்கின்றார்கள் : நபிகளார் தனது குடும்பத்தில் ஒருவரை நோய் விசாரிக்கச் சென்றார்கள். (நோயாளியை) தனது வலக்கரத்தால் தடவிவிட்டு இறைவா மனிதர்களின் இரட்சகனே! இந் நோயை நீக்குவாயாக! நீ நிவாரணம் வழங்குவாயாக! நீயே நிவாரணமளிப்பவன்! உனது நிவாரணத்தை தவிர வேறு நிவாரணங்களில்லை! நோயை விட்டுவைக்காத அளவுக்கு நிவாரணமளிப்பாயாக! (என்று கூறினார்கள்)” (புஹாரி-5675)

அடுத்து இந்த சுப்ஹான மவ்லிது வரிகள் நோய்க்கான நிவாரணம் நபியவர்களிடமே உண்டு என்றும் நபியவர்கள் யாரையாவது நோய் விசாரிக்கச் சென்றால் அவர்களுடைய நோயை அல்லாஹ் குணப்படுத்திடுவான் என்றும் எழுதப்பட்டுள்ளது. சகல நோயையும் குணப்படுத்திடுபவன் அல்லாஹ் என்று மேலே தெளிவாக பார்த்த பொழுது, எப்படி அதன் நிவாரணம் நபி (ஸல்) அவர்களிடம் இருக்க முடியும்? நபியவர்கள் எங்காவது அப்படி கூறியதாக ஒரு ஹதீஸூம் கிடையாது இது நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தன்மை கொண்டவராக சித்தரிக்க முற்படும் இணைவைப்பு வரிகளாகும். நபியவர்களின் காலத்தில் எத்தனையோ பேர் நோயுற்றார்கள். அவர்களை நபி (ஸல்) அவர்கள் நோய் விசாரிக்கவும் சென்றார்கள். ஒருவரைக் கூட நபியவர்களால் குணப்படுத்த முடியவில்லை. தனது பெரிய தந்தை அபூதாலிப் மரணப்படுக்கையில் இருந்த பொழுதும் தனக்கு பணிவிடை செய்த யூத சிறுவன் நோயுற்று இருந்த பொழுதும் தனது பேரக்குழந்தை நோயினால் அவஸ்த்தைப் பட்ட பொழுதும் ஏன் நபிகளாரால் நிவாரணம் வழங்கி காப்பாற்ற முடியாமல் போனது? எனவே, தெளிவான இணைவைப்பை மக்களுக்கு போதிக்கும் இந்த சுப்ஹான மவ்லிதை இனிமேலும் விட்டுவைக்க ஈமானிய உள்ளங்கள் காத்திருக்க கூடாது.

# படைப்பினங்களின் இரட்சகர் யார்?

وَأَنْتَ حَقًّا غِيَاثُ الخَلْقِ أَجْمَعِهِمْ

**'(நபியே!) நீங்கள்தான் உண்மையாகவே அனைத்து படைப்பினங்களுக்கும் உதவி செய்கின்றவராக (இரட்சிப்பவராக) இருக்கின்றீர்கள்'**

சுப்ஹான மவ்லிதின் 64 ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள அல்லாஹ்வாக நபியவர்களை நேரடியாக வர்ணிக்கும் வரி இதுவாகும்.

அனைத்தையும் படைத்து பரிபாலித்து, அனைவருக்கும் உணவளிப்பவன் அல்லாஹ் என்று அவனே தன் திருமறையின் பல இடங்களில் பறைசாற்றுகின்ற பொழுது, அனைத்தினதும் இரட்சகராக நபியவர்கள் இருக்கின்றார்கள் என்று பாடுகின்றார்களே! இந்த இணைவைப்பை என்ன வார்த்தை கொண்டு வர்ணிக்க முடியும்? அல்லாஹ் கூறுவதனைப் பாருங்கள் "(அல்லாஹ் எத்தகையவன் என்றால்) அவனே உலகத்திலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான் பின்னர் அவன் வானத்தின் பால் உயர்ந்துவிட்டான். அவற்றை ஏழு வானங்களாக ஒழுங்காக்கினான். அன்றியும் அவனே ஒவ்வொரு பொருளையும் நன்கறிபவனாக இருக்கின்றான்"(02:29)

# கஷ்டங்கள் துன்பங்களின் போது கை கொடுப்பது அல்லாஹ்வா? அல்லாஹ்வின் தூதரா?

م بَسَطتُ كَفَّ فَاقِتِي وَالنَّدَم    أَرْجُوْا جَزِيْلَ فَضْلِكُمْ وَالكَرَم    مُسْتَشْفِعًا نَزِيْلَ هَذَا الحَرَم

قِ فَلاحِظُوْنِيْ بِدَوَامِ المَدَدِ    فَانْجِدُوْا المِسْكِيْنَ قَبْلَ الغَرَق    وَاطفِؤُا بِالبَسْطِ وَهْجَ الحُرَق

وَإِبْرِدُوْا بِاللُطفِ حَرَّ الكَبَدِ

**(நபிகள் நாயகமே!) எனது வறுமை, கைசேதம் காரணமாக (உங்களிடம்) கையேந்துகிறேன். உங்களது பெரும் அருளையும் வள்ளல் தன்மையையும் நான் நம்பியிருக்கின்றேன். இந்த ஹரம் ஷரீபில் தங்கியிருக்கும் (உங்களிடம்) ஷபாஅத்தை வேண்டி நிற்கிறேன். எனக்கு நிரந்தர உதவிசெய்து கவனித்திடுங்கள். (வறுமையில்) மூழ்குவதற்கு முன் இந்த ஏழையை காப்பற்றிடுங்கள். உங்கள் தாராளத் தன்மையால் எரியும் நெருப்பை அணைத்திடுங்கள். உங்கள் இரக்க குணத்தால் ஈரலை குளிரூட்டுங்கள் நபிகளாரே!**

يَا سَيِّدِيْ يَا شَفِيْعِيْ خُذْ بِيَدِيْ

**‘என் தலைவரே! எனது பரிந்துரையாளரே! என் கரம்பிடித்து காப்பாற்றுங்கள்’**

فَرَوِّحُوْا رُوْحِيْ بِكَشْفِ الكُرَبِ

**‘நபியவர்களே! கஷ்டங்களை நீக்கி என் ஆத்மாவுக்கு சுகமளியுங்கள்’**

ضَاقَتْ بِيْ الأَسْبَابْ   فَجِئْتُ هَذَا البَابْ   أُقَبِّلُ الأَعْتَابْ   أَبْغِيْ رِضَا الأَحْبَابْ   وَالسَّادَةِ الأَخْيَارْ

**‘என் வாழ்கை நெருக்கடிக்கு உள்ளாகி விட்டது! எனவே இந்த வாசல்படிக்கு (நபிகளாரின் அடக்கஸ்தலத்திற்கு) வந்து விட்டேன்! நேசத்திற்குரிய தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் (உங்களுக்கு அருகில் அடங்கியுள்ள அபூபக்கர், உமர் அவர்களின்) திருப்பொருத்தத்தை நாட்டம் கொண்டு படிக்கட்டுகளை முத்தமிடுகின்றேன்!’**

يَا سَيِّدَ السَّادَاتِ جِئْتُكَ قَاصِدًا   أَرْجُوْ حِمَاكَ فَلَا تُخَيِّبْ مَقْصَدِيْ   مَا لِيْ سِوى حُبِّيْ لَدَيْكَ وَسِيْلَةً

**‘தலைவர்களுக்கெல்லாம் தலைவர் அவர்களே! தேவையுடையவனாக உங்களிடம் வந்து விட்டேன். உங்களின் பாதுகாப்பை வேண்டுகிறேன். என் தேவைகளை மறந்து விடாதீர்கள். உங்களிடம் வஸீலா தேடும் நேசத்தை தவிர வேறு நேசம் எனக்கில்லை’**

يَا سَيِّدِيْ يَا رَسُوْلَ اللهِ خُذْ بِيَدِيْ   مَا لِيْ سِوَاكَ وَلَا أَلْوِيْ إِلى أَحَدٍ

**‘என் தலைவரே! அல்லாஹ்வின் தூதரே! என் கரம்பிடித்து காப்பாற்றுங்கள்! உங்களைத் தவிர வேறு யாரிடமும் நான் ஒதுங்கமாட்டேன்’**

إِنَّا بِهِ نَسْتَجِيْر فِيْ دَفْعِ كُلِّ إِنْتِقَام

**‘அனைத்துத் துன்பங்களையும் நீக்கிட அவரிடம், நபி (ஸல்) அவர்களிடம் அடைக்களம் தேடுகிறோம்’**

சுப்ஹான மவ்லிதின் 23, 28, 29, 30, 35, 49, 64 ஆம் பக்கங்களில் எழுதப்பட்டுள்ள ஈமானிய அடிப்படைகளை தகர்க்கக் கூடிய நபியவர்களை நேரடியாக அல்லாஹ்விற்கு ஒப்பாக்கும் ஆபத்து நிறைந்த வாசகங்கள் இவைகளாகும்.

என்னதான் கஷ்ட துன்பங்கள் எமக்கு ஏற்பட்டாலும் அவைகளை நீக்குபவனும் வறுமையைப் போக்கி உணவளிப்பவனும் அல்லாஹ் மாத்திரமே என்று குர்ஆனின் பல வசனங்களில் இறைவன் கூறுகின்றான். வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொள்ளாதீர்கள் ஏனெனில், உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம்"(06: 151)

நிச்சயமாக உம்முடைய இறைவன் தான் நாடியோருக்கு விசாலமாக உணவுகளை வழங்குகின்றான். (தான் நாடியோருக்கு) அளவாகவும் கொடுக்கின்றான். நிச்சயமாக அவன் தன் அடியார்களின் இரகசியங்களை நன்கு அறிந்தவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கின்றான்" (17:30)

நீங்கள் அல்லாஹ்விடமே ஆகார வசதிகளைத் தேடுங்கள். அவனையே வணங்குங்கள் அவனுக்கே நன்றி செலுத்துங்கள். அவனிடத்திலேயே நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள்." (29:17)

அன்றியும் பூமியிலுள்ள எத்தனையோ பிராணிகள் தங்கள் உணவை சுமந்து கொண்டு திரிவதில்லை. அவைகளுக்கும் உங்களுக்கும் அல்லாஹ்தான் உணவளிக்கின்றான். இன்னும் அவன் (யாவற்றையும் செவிமடுப்பவனாகவும் நன்கு) அறிபவனாகவும் இருக்கின்றான்" (29:60)

இப்படி மிகத்தெளிவாக அல்லாஹ் கூறியிருக்கின்ற பொழுது, நபி (ஸல்) அவர்களால் எப்படி எமது தேவைகளை பூர்த்தி செய்யவும் கஷ்டங்களை நீக்கவும் முடியும்? நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஸஹாபாக்களும் நபியவர்களும் உண்ண உணவில்லாமலும் உடுக்க உடையில்லாமலும் பேரீத்தம் பழங்களோடும் கோதுமைகளோடும் வாழ்க்கையைக் கழித்த பல வரலாறுகளைக் காணுகிறோமே! அப்போதெல்லாம் நபி (ஸல்) அவர்கள் உணவளித்து கஷ்டங்களை நீக்காதது ஏன்? அப்பொழுதே நபியவர்களால் உதவி செய்ய முடியாதென்றால், இப்பொழுது மட்டும் எப்படி முடியும்? நபியவர்களிடம் அருளை எதிர்பார்ப்பதாக இவ்வரிகள் சொல்கின்றதே நபியவர்களால் அருள் செய்ய முடியுமா? அருள் செய்வது யாருடைய அதிகாரம் அல்லாஹ்வுடையதல்லவா? நபியவர்கள் கரம்பிடித்து காப்பாற்றுவார் என மற்றும்பல வசனங்களில் எழுதப்பட்டுள்ளனவே இந்த அதிகாரத்தை வழங்கியது யார்? ஒருவர் மரணித்து விட்டால் அவருக்கும் உலகிற்கும் இடையில் எவ்வித தொடர்புகளுமில்லை என்ற சாதாரண குழந்தைகளுக்கு உள்ள அறிவு கூட இல்லாமல் நபிகளாரை அல்லாஹ்வாக வர்ணித்து எழுதிவைத்துள்ளார்களே இதனை எப்படி ஒரு மு.ஃ.மினால் ஏற்க முடியும்?

## நபி (ஸல்) அவர்கள் மீது சத்தியம் செய்யலாமா?

أَقسَمْتُ فِيْ نَصْرِيْ بِكُمْ عَلَيْكُمْ

**'நீங்கள் எனக்கு உதவிபுரிய வேண்டும் என உங்கள் மீதே சத்தியம் செய்கிறேன்'**

சுப்ஹான மவ்லிதின் 30 ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள மாபெரும் இணைவைப்பு வரி இதுவாகும்.

படைப்பினங்கள் மீது சத்தியம் செய்யும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. அதனை அல்லாஹ் வேறு யாருக்கும் வழங்கவில்லை அதனை குர்ஆன் நெடுகிலும் பார்க்கலாம்.

"சூரியன் மீதும் அதன் பிரகாசத்தின் மீதும் சத்தியமாக, அதனைத் தொடர்ந்து வரும் பிரகாசத்தின் மீதும் சத்தியமாக"(91:1-2)

"முற்பகல் மீது சத்தியமாக, ஒடுங்கிக் கொள்ளும் இரவின் மீது சத்தியமாக!"(93: 01-02)

"அத்தி மீதும் ஒலிவத்தின் மீதும் சத்தியமாக, ஸினா மலையின் மீதும் சத்தியமாக, மேலும் அபயமளிக்கும் இந்த நகரத்தின் மீதும் சத்தியமாக! (95:01-02-03)

"வானத்தின் மீதும் சத்தியமாக தாரிகின் மீதும் சத்தியமாக!"(86:01)

இவ்வசனங்கள் அனைத்தும், அல்லாஹ் மட்டுமே தன் படைப்புகள் மீது சத்தியமிட உரித்தானவன் என்பதனை விளக்குகின்றன. ஆனால், மனிதன் சத்தியம் செய்ய வேண்டுமாக இருந்தால் படைப்புகள் மீது சத்தியம் செய்ய முடியாது. படைப்பாளனான அல்லாஹ் மீது மட்டுமே சத்தியம் செய்ய முடியும். அதனை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது

இப்னு உமர் (ரழி) அறிவிக்கின்றார்கள் : (என் தந்தை) உமர் இப்னு கத்தாப் (ரழி) அவர்கள், பயணிகள் சிலரிடேயே இருந்து கொண்டிருந்த போது அவர்களை அடைந்தேன். அப்போது உமர் (ரழி) அவர்கள் தம் தந்தையின் மீது சத்தியம் செய்தார்கள். உடனே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்களை அழைத்து, அறிந்து கொள்ளுங்கள் உங்கள் தந்தையர் மீது சத்தியம் செய்வதை அல்லாஹ் உங்களுக்கு தடை செய்துவிட்டான். சத்தியம் செய்ய முற்படுபவர் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும் என்று கூறினார்கள். (புஹாரி-6108)

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அறிவித்தார்கள் : சத்தியம் செய்கிறவர் அல்லாஹ்வின் மீதே சத்தியம் செய்யட்டும் அல்லது வாய்மூடி இருக்கட்டும் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி-2679)

இப்படி மிகத் தெளிவாக குர்ஆனும் ஹதீஸும் சத்தியம் என்பது அல்லாஹ் மீது மாத்திரமே என கூறுகின்ற பொழுது, எப்படி அதனைத் தடுத்த நபியவர்களின் மீதே சத்தியம் செய்ய முடியும்? இது எவ்வளவு பெரிய இணைவைப்பு என்பதனை அறியாமல் ஓதுபவர்களின் மறுமை நிலை என்னவாகும்?? வாசகர்களே! சிந்திப்போம் இந்த மவ்லிது குப்பையை எரித்து சாம்பலாக்குவோம்.

## மரணித்தோரை உயிர்ப்பிப்பவரா? நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

حَبِيْب مُحِيْ العِظَام

**‘(மரணித்த) எலும்புகளை உயிர்பிக்கும் தோழரே!’**

சுப்ஹான மவ்லிதின் 23ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள நச்சுக்கருத்து இதுவாகும்.

மரணித்து எலும்புகளாக உக்கிப் போனவர்களை மீண்டும் அல்லாஹ்தான் உயிர்ப்பித்து எழுப்புபவன் என குர்ஆன் மிகத் தெளிவாகக் கூறுகின்ற பொழுது, அந்த ஆற்றல் நபியவர்களுக்கும் உண்டு என இந்த மவ்லிது கப்ஸா கூறுகின்றதென்றால், இதனை இணைவைப்பு என்று சொல்லாமல் வேறு என்ன பெயர் கொண்டு அழைக்க முடியும்?

“அவர்கள் நம் வசனங்களை நிராகரித்து, நாம் (மரணித்து) எலும்புகளாகவும் உக்கி மண்ணோடு மண்ணாகவும் ஆகிவிடுவோமாயின் (மீண்டும்) புதியதொரு படைப்பாக எழுப்பப்படுவோமா? என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்களே அதற்கு அவர்களுடைய கூலி இதுதான்” (17:98)

“நிச்சயமாக வானங்களையும் பூமியையும் படைத்தவனாகிய அல்லாஹ், அவர்களைப் போன்றதைப் படைக்க ஆற்றலுடையவன் என்பதை அவர்கள் அறியவில்லையா?” (17:99)

“மேலும் அவன் தன் படைப்பை (தான் படைக்கப்பட்டது எப்படி என்பதை) மறந்துவிட்டு அவன் நமக்காக ஓர் உதாரணத்தையும் கூறுகின்றான்: எலும்புகள் அவை மக்கிபோய்விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்? என்று”(36:78)

“முதன் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன் என்று (நபியே) நீர் கூறுவீராக”(36:79)

அல்லாஹ்வுக்கே சொந்தமான பண்பு மீண்டும் உயிர்ப்பிப்பது என எவ்வளவு தெளிவாக இந்த வசனங்கள் கூறுகின்றன! நபி (ஸல்) அவர்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்கியது யார்? ஓர் ஆதாரத்தை மவ்லிதை நியாயப்படுத்தும் சகோதரர்களால் காட்ட முடியுமா?

dot printers - 0776965450